Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை -14 30-11-2003 ஞாயிற்றுக்கிழமை ஓசை 285

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்,
படம் பிறேம் செய்தல்
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்
யாழ் சாலை,
கிளிநொச்சி. (சி-8689)

R.V.
பந்தல்சேவை
தர்மபுரம்.

## பதில் ஆட்கள் நியமிக்காது வன்னியிலிருந்து சுகாதார ஊழியர் இடமாற்றம் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சுகாதாரத் திணைக்களத்தின் 2004ஆம் ஆண்டிற்கான இடமாற்றங்கள் அண்மையில் வெளிவந்துள்ள வேளையில், வன்னிப்பகுதியில் உள்ள சுகாதார சேவை ஊழியர்களின் இடமாற்றங்களுக்குப் பொருத்தமான பதில் ஆட்கள் நியமிக்கப்படாது இடமாற்றங்கள் அனுப்பப்பட்டிருப்பது, சுகாதார சேவை ஊழியர்கள் மத்தியில் மனக் கஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. வன்னியில் யுத்த காலத்தில், பல ஆண்டுகளாக பல இன்னல்களுக்கு மத்தியில் கடமையாற்றிய இந்த ஊழியர்களைப் பொருத்தமான பதில் ஆட்கள் இல்லாமல் விடுவிப்பதில் வன்னியிலுள்ள சுகாதார சேவை அதிகாரிகளுக்குச் சங்கடத்தையும் மனக்கஷ்டத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. வடக்கு-

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா ஆதார வைத்தியசாலையை தரம் உயர்த்தியும் பயனில்லை

### - வைத்திய அத்தியட்சகர் கவலை

(செட்டிகுளம்)

வவுனியா ஆதாரவைத்தியசாலை பொது மருத்துவமனையாக உயர்த்தியும் எந்த விதமான முன்னேற்றமும் இல்லை என்று வைத்திய அத்தியட்சகர் கே.செந்தில்காந்தன் தெரிவிக்கின்றார்.

வவுனியா பொது மருத்துவமனையில் தாதிமார் 50%, இரத்தப்பரிசோதகர் 70%, பரிசாரகர்கள் சிற்றூழியர் 50%, சமையல்காரர் 100% வெற்றிடம் உள்ளது என்று அவர் மேலும் தெரிவிக்கின்றார். வைத்தியர்களுக்கும் பாரிய அளவு வெற்றிடம் உண்டு. இதனால் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியாததுடன், தொடர்ச்சியாக பொது மருத்துவமனையாக இயங்குவதில் சிரமமாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கிண்ணியாவில் மூன்று முஸ்லிம்கள் இனந்தெரியாதோரால் குத்திக்கொலை

## அப்பகுதியில் எழுந்த பதற்றத்தினால் இரவுநேர ஊரடங்கு பிறப்பிப்பு

(திருமலை)

**திருமலை மாவட்டம் கிண்ணியா பிரதேச செயலர் பிரிவின் நடுஊற்று என்ற கிராமத்தில் மூன்று முஸ்லிம்கள் இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டுள்ளனர். இதனால் அப்பகுதியில் எழுந்தபதற்றத்தை யடுத்து இரவு நேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

நடுஊற்று என்ற கிராமத்தின் வயல் வெளியில் குத்துக்காயங்களுடன் காணப்பட்ட இச்சடலங்கள் நாகூர் பிச்சை முகமது சலீம் (வயது 51), அப்துல் முத்தலிம் சுபைல்(வயது50), முகமது ருசைன்(வயது55) ஆகியோரது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு வயல் காவலுக்குச் சென்ற இவர்கள் நேற்றுக் காலை குத்துக்காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

இதனால் அப்பகுதியில் பதற்ற நிலை நீடித்து வருவதால் கிண்ணியாவில் நேற்றுக்காலை 6.00மணி தொடக்கம் இன்று காலை 6 மணி வரை ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இதனை அடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அவ்விடத்திற்குச் சென்று நிலைமையைக் கேட்டறிந்ததாக தெரிய வருகிறது. திருமலை பொலிசார் கொலைதொடர்பான விசாரணையை நடத்த குழுவொன்றையும் நியமித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த சில தினங்களுக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா கிரிகெட் தலைவரை கைது செய்ய சட்டமா அதிபர் உத்தரவு



இலங்கை கிரிக்கெட் தலைவரும் ரெலிக்கொம் நிறுவன தலைவருமான திலங்க சுமதி பாலவை கைது செய்து நீதிமன்றில் நிறுத்துமாறு சட்டமா அதிபர் கமல சபேசன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

கிரிகெட் சபை நிதியிலிருந்து பாதாள உலகக் குழுத்தலைவர் ஒருவர் இங்கிலாந்து செல்ல உதவியதாகவும் அவருக்கு போலிக் கடவுச்சீட்டுப் பெற்றுக்கொடுத்ததாகவும் இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்துப் பொலிசார் அவரது வீட்டுக்குச் சென்றபோது அவர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தமிழரின் வீடுமீது கைக்குண்டு வீச்சு

(திருகோணமலை)

திருகோணமலை ஏகாம்பரம் வீதியில் மூன்றாம் கட்டைப் பகுதியில் உள்ள சிவராஜா என்பவரது வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வீட்டில் இருந்தோர் காயங்கள் எதுவும் இன்றி உயிர் தப்பியுள்ளனர்.

இத்தாக்குதல் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் நடந்துள்ளது. இதன்போது வீட்டின் மீது கைக்குண்டொன்று வீசப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, திருகோணமலையில்ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தொடர்ந்து ஆலங்கேணிப்பிரதேசத்தில் இருந்து ஈச்சந்தீவுப் பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்தவர்களுக்கான உணவு விநியோகம் தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இப்பிரதே

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதி மக்கள் அனைவருமே இனவாதிகள் என நினைக்கக்கூடாது

### சிறிலங்காப் பிரதமர் ரணில்

(கொழும்பு)

தென்னிலங்கையில் வாழும் மக்கள் அனைவருமே இனவாதிகள் அல்லர், ஒரு சில குழுவினர் சமாதானத்திற்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர். எனினும் இவர்களின் எதிர்ப்புக்களை மக்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

நேற்று மாவனெல்லையில் நடைபெற்ற கூட்டங்களில் பங்கேற்ற அவர் சமாதானம் இன்றி நாட்டில் அபிவிருத்தி ஏற்படப் போவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது இடைக்கால பரிந்துரையை சமர்ப்பித்தது வரவேற்கக் கூடியவிடயம். இதேவேளை முஸ்லிம்களின் பிரச்சினைக ளும் இனப்பிரச்சினைத் தீர்வுகளும் உள்ளடங்கும் விதத்தில் முஸ்லிம் தரப்பும் தமது யோசனைகளை முன்வைக்க வேண்டுமென பிரதமர் கேட்டுக்கொண்டார்.

சமாதானம் இன்றி அபிவிருத்தியை முன்நகர்த்திச் செல்ல முடியாது. மீண்டும் யுத்தம் ஒன்றை விரும்பாத நிலையிலேயே சமாதான முன்நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.இந்நிலையில் சமாதான அடிப்படையில்லாமல் தேசிய இணக்கம் ஒன்றுக்குச் செல்வது பிரயோசனமற்றது எனவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை தேசிய அரசு என்ற நிலைப்பாடு நாட்டில் மேலும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரத்தில் இந்திய பங்களிப்பு அவசியம்

### வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்

(கொழும்பு)

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீளக்குடியேற்றுவதில் இந்திய அரசு சர்வதேச சமூகத்திற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். அதே நேரம் இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் பங்களிப்பு அவசியம் என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் விடயம் சர்வதேசமயப்படுத்தப்பட்டதால் முஸ்லிம்களின் உரிமையை இலங்கையில் வென்றெடுக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார். இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல்கள் குறித்து தெரிந்து கொள்வதற்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலானகுழு இந்தியா சென்றுள்ளது. இதில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை சிறப்பாக அனுஷ்டிக்க ஏற்பாடு

ஆண்டுதோறும் டிசம்பர் மூன்றாம் திகதியன்று இடம்பெறும் சர்வதேச வலுவிழந்தோர் தினத்தினை மிகவும் சிறப்பான முறையில் அனுஷ்டிப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வலுவிழந்தவர்களும் சமுதாயத்தின் ஓர் அங்கமானவர்கள், வாழ்க்கை நீரோட்டத்தில் சம்பந்த முடையவர்கள், சாதாரண மக்களுக்குரிய அனைத்து அடிப்படை உரிமைகளுக்கும் பாத்திரமானவர்கள் என்கின்ற உன்னத கோட்பாடுகளுக்கமைய அப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை வசதிகளை மேம்படுத்துவதே இச் செயற்பாடுகளின் அடிப்படை நோக்கமாகும் என சர்வதேச வலுவிழந்தோர் தினம் தொடர்பாக வெண்புறா நிறுவனம் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல சகாப்தங்களாகத் தொடரும் போர் அனர்த்தங்களினால் வலுவிழந்தோர் பட்டியல் விரிவடைந்து செல்வதோடு ஏனைய பிற சமூக மட்டங்களிலிருந்து இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள துர்ப்பாக்கிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பல்கட்டும் நிலையம்

குறித்த தவணையில் சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், பற்களுக்கு கிளிப் போடுவதற்கும் யாழ்.சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சியில் இயங்கிவருகிறது. வேந்தன் பல்கட்டும் நிலையம் ஆனந்தபுரம், கிளிநொச்சி. (3890)

### தவறிவிட்டது

மாணிக்கம் நாகேஸ்வரி என்பவருடையதேசிய அடையாள அட்டையும்சிலமுக்கிய ஆவணங்கள் அடங்கிய கைபேஸ் ஒன்று 27.11.2003 அன்று விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுகொள்கிறேன். (3366)

# வடமராட்சி இறங்குதுறைகளை ஆழப்படுத்த படையினர் தொடர்ந்து அனுமதி மறுப்பு

## முருகைக்கல்லில் மோதி படகு மூழ்கியது

வடமராட்சி வடக்கு கரையோரக் கிராமங்களில் உள்ள மீன்பிடி இறங்குதுறைகளை ஆழப்படுத்தும் விடயத்தில் படைத்தரப்பு தொடர்ந்தும் விட்டுக்கொடுப்புக்களைச் செய்ய மறுத்து வருகின்ற நிலையில் மீன்பிடித்தொழில் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளது.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையினால் இறங்குதுறைகளில் நீர்மட்டம்தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் அப்பகுதியில்உள்ள முருகைக்கல் ஒன்றில் மோதி பல இலட்சம்ரூபா பெறுமதியான மீன்பிடிப்படகொன்று வல்வெட்டித்துறை கரையோரப் பகுதியில் மூழ்கியுள்ளது. முருகைக்கல்லுடன் மோதியதால் ஏற்பட்ட பாரிய துவாரத்தினூடாகக் கடல் நீர் உட்புகுந்ததாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். பின்னர் அப்படகு மீட்கப்பட்டுள்ளபோதும் ஏனைய பகுதி மீனவர்களும் அச்சம் காரணமாக தமது படகுகளைக் கடலிலிருந்து கரையேற்றியுள்ளனர்.

இதையடுத்துத் தற்போது கட்டுமரங்கள் மற்றும் சிறு படகுகளைக்கொண்டேஅப்பகுதி மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை கரையோரப் பகுதிபாதுகாப்புத் தொடர்பான அதிகாரிகள் குழு நேரில் வருகை தந்து பார்வையிட்டு இவ் இறங்குதுறைகளை ஆழப்படுத்த அனுமதிக்கலாம் எனத்தெரிவித்த போதும் படைத்தரப்பு தொடர்ந்தும் இவ்விடயத்தில் மௌனம்காப்பதாக இப பகுதி மீனவ சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன. (27)

# பதினொரு மாவீரர்களின் வித்துடல்கள் ஆழியவளை துயிலுமில்லத்தில் விதைப்பு

வடமராட்சி கிழக்கு இராணுவத்தினர் கட்டுப்பாட்டில் இருந்த காலப்பகுதியில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 11மாவீரர்களின் வித்துடல்கள் குடாரப்பு புள்நீரடிப் பகுதியில் ஓர் இடத்தில் புதைக்கப்பட்டிருந்தன. அவைகள் தற்பொழுது மாவீரர் நாளை முன்னிட்டு 26.11.2003 அன்று அங்கிருந்து எடுத்துவரப்பட்டு உடுத்துறையில் புதிதாக அமைகக்கப்பட்டுள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுமக்களின் மலர் அஞ்சலியுடன் சகல இராணுவமரியாதைகளுடன் விதைகுழியில் விதைக்கப்பட்டுள்ளன. (11)

## -வடமராட்சி கிழக்குப் பகுதியில்-

# தாளையடி முதல் கேவில்வரையான போக்குவரத்து முழுதாகப் பாதிப்பு

வடமராட்சிக்கிழக்கில் பெய்து வரும் மழைகாரணமாக தாளையடி தொடக்கம் கேவில்வரையான கரையோரப்பாதை முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகளில் கூடுதலாக 200மீற்றர்,300மீற்றர் இடைவெளிகளில் வெள்ளம்பாய வீதியை ஊடறுத்து மக்களால் வெட்டப்பட்டுள்ளது. இவ்வீதி அண்மையில் தான் களிமண்ணினால் அமைக்கப்பட்டது. இதனால் வீதியால் பயணம் செய்யும் பாதசாரிகள் தொடக்கம் சைக்கிள்களில் பயணம் செய்யும் மக்கள் வரை வீதிகளில் களி மண்ணில் புதைவதையும் சறுக்கி விழுவதையும் காணக்கூடியதாக உள்ளது. இதனால் முகமாலை கேவில் வாகன சேவை தற்பொழுது ஆழியவளை வரைதான் நடைபெறுகிறது. அதுவும் மருதங்கேணி சந்தியில் இருந்து பருத்தித்துறை ஆழியவளை பிரதான வீதியால் மட்டும் நடைபெறுகின்றது. இதனால் வெற்றிலைக்கேணி தொடக்கம் கட்டைக்காடு கேவில் வரையான மக்கள் கால்நடையாக நடந்து வந்து ஆழியவளையில் வாகனங்களில ஏறிச்செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனால வெற்றிலைக்கேணி கட்டைக்காடு மக்கள் மற்றும் மாணவர்கள் பெரும்சிரமமடைகின்றனர். (11)

## மாவீரர் நாளன்று

# முள்ளியவளை அரசினர் மருத்துவமனையில் சிறப்புற நடைபெற்ற மகப்பேற்று விடுதி திறப்பு

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையின் மகப்பேற்று மனை திறப்பு விழா மாவீரர் நாளன்று காலை 9.00மணிக்கு சிறப்பாக நடைபெற்றது.

மேற்படி திறப்பு விழாவானது கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் .செ.காசிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக தமிழீழ தேசியக் கொடியினை முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.சரவணன் ஏற்றி வைக்க ஈகச்சுடரினை மாவீரர் பரணியின்தந்தையார் க.நாகரத்தினம் முல்லை மாகாண சுகாதார வைத்திய அதிகாரி ஜீ.ஜெயக்குலராஜா, தமிழீழ சுகாதார சேவை முல்லை மாவட்ட பொறுப்பாளர் வைத்தியர் நாயகன் ஆகியோர் ஏற்றி வைத்ததை அடுத்து மகப்பேற்று மனைக்கான பெயர்ப்பலகையினை முல்லை மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இசையமுதன் திரை நீக்கம் செய்து வைத்ததையடுத்து மகப்பேற்று மனையினை சம்பிர தாய பூர்வமாக நாடாவினை வெட்டி முல்லை மாகாண சுகாதார வைத்திய அதிகாரி ஜீ. ஜெயக்குலராஜா திறந்து வைத்தார். மேற்படி வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ராசதுரை வரவேற்புரை நிகழ்த்தியதை அடுத்து தலைமையுரை இடம் பெற்று கருத்துரைகளை நிர்வாக சேவைப் பொறுப்பாளர் இசையமுதன், சுகாதார வைத்திய அதிகாரி ஜீ.ஜெயக்குலராஜா, வைத்திய அதிகாரி சிவபாலன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.தொடர்ந்து மாவீரர்நாள் நினைவாகவும் மகப்பேற்று மனை திறப்பு விழா நினைவாகவும் மரநடுகை இடம்பெற்றது. தொடர்ந்து நன்றியுரையினை மகப் பேற்றுமனை தாதி உத்தியோகத்தர் திருமதி. ஈ.மகேஸ்வரன் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு கட்டம் ii மாவட்ட வைத்திய அதிகாரி க.அகிலன், பல்வைத்திய அதிகாரிகளான திருமதி ய.கணேஸ், செல்வி மதுவந்தி, முள்ளியவளை தெற்கு கிராம அலுவலர் தெய்வேந்திரம் மட்டக்களப்பு விளையாட்டுத்துறை அதிகாரி வைரமுத்து, மகப்பேற்று மனை மருத்துவ மாதுக்கள், தாதிமார்கள், நலன்விரும்பிகள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ஆ)

# கல்வியியற் கல்லூரி அனுமதி 20ம் திகதி நேர்முகப்பரீட்சை

2004ஆம் ஆண்டு கல்வியியற் கல்லூரியில் சேர்வதற்காக விண்ணப்பித்து நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் பெயர்விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சைத் திகதி 20ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நேர்முகப்பரீட்சை கிளி. மாவட்ட விண்ணப்பதாரர்களுக்கு அன்று காலை 8மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனையில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் அறியத்தந்துள்ளார்.

# முள்ளியவளையில் தொடர் மழையால் வெள்ள அபாயம், வீதிகள் துண்டிப்பு

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக பெய்து வரும் தொடர் மழையினால் தாழ்வான இடங்களில் உள்ள பொதுக் கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், குடியிருப்புக்கள் யாவும் வெள்ளத்தில் மூழ்கும் அபாய நிலை உருவாகியுள்ளது.

பெருமழை காரணமாக போக்குவரத்து வீதிகளை ஆங்காங்கே ஊடறுத்து வெள்ளம் பாய்வதுடன் பெருமளவான காலபோக நெற்செய்கை வயல்வெளிகள் யாவும் வெள்ளத்தினால் மூடியுள்ளதனை காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை முள்ளியவளை பொதுச் சந்தைக்குள்ளும் அதை அண்மித்த பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களிலும் தொழில் நிலையங்களிலும் குடியிருப்புக்களிலும் வெள்ளம் புகுந்து பலத்த சேதம் ஏற்படுத்தியுள்ளதை காண முடிகின்றது.

மேற்படி பொதுச் சந்தைக்கு முன்பான வீதியிலும் முள்ளியவளை நாவற்காடு வீதி மற்றும் முள்ளியவளைச் சந்தி அம்மன் வீதி தண்ணீரூற்று ஆலடிச்சந்தி வீதி என முல்லைத்தீவு முள்ளியவளை பிரதான வீதியில் ஆங்காங்கே வீதியைக் குறுக்கறுத்தும் ஊடறுத்தும் வெள்ளம் பாய்ந்து வருவதால் சில இடங்களில் போக்குவரத்து பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றது.

மேலும் தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் இவ்வீதியூடான போக்குவரத்துக்கள் தடைப்படலாம் என அஞ்சப்படுகிறது.எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு செல்லும் அப்பகுதி மாணவர்களே அதிகம் சிரமப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# திருகோணமலை மூர்வீதியில் தமிழர் மத்தியில் பதற்றநிலை

திருகோணமலை மூர்வீதிப் பகுதியில் 24 மணிநேரமும் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுமாறு கிழக்குப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜேசேகர திருகோணமலை பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு 9 மணியுடன் இப்பகுதியில் இருந்து பொலிசார் விலகிக் கொண்டதையடுத்து நள்ளிரவு 12 மணியளவில் ஆயுதக்குழுவொன்று தமிழர்கள் மீது தாக்குதல் நடத்த எத்தனித்துள்ளது.

தமிழர்கள்மீது தாக்குதல் நடத்துவதற்கு இளைஞர்கள் குழுவொன்று கத்திகள்,பொல்லுகள் சகிதம் வீதிகளில் நடமாடுவதாக திருகோணமலைப் பொலிசாரின் கவனத்திற்கு அப்பகுதி மக்களால் கொண்டுவரப்பட்டது. இதைத் தொடர்ந்து பொலிசார் அவ்விடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்தே மூர்வீதிப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவுவதால் 24 மணிநேரமும் பொலிசாரைப் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுமாறு கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

# நெடுங்கண்டல் விளையாட்டுக்கழக மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மாந்தை மேற்கு, மடு விளையாட்டுத்துறையினரின் ஆதரவுடனும்மாந்தைமேற்கு விளையாட்டுத்துறையின் ஆலோசனையுடனும் நெடுங்கண்டல் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய மாபெரும் உதைபந்தாட்ட நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது. நிகழ்வை திலீபன் மருத்துவமனைப் போராளி சுகந்தன் தேசியக் கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்.

இறுதி நாள் நிகழ்வானது 22ஆம் திகதியன்று நடைபெற்றது. இறுதி ஆட்டத்தில் சுடரொளி விளையாட்டுக்கழகமும் சென்.அன்ரனிஸ் வி.க. அந்தோனியார் புரமும் பங்கு பற்றின. இந்நிகழ்வினை கடற்புலிகளின் மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி லக்ஸ்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழக மன்னார் மாவட்டப் பணிப்பாளர் சீசர் ஆகியோரால் வீரர்களை அறிமுகப்படுத்தி இறுதிப் போட்டி 4.00மணியளவில் ஆரம்பமானது. இதில் நடுவர்களாக கி.செபஸ்ரியன், உதவி நடுவர்களாக எஸ்.றெக்ஸ் அருள்நேசன், பிரிஸ்லேம்பெட், ஆகியோர் பணியாற்றினர். இப்போட்டியில் 2:1என்ற கோல்கணக்கில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் சுடர் ஒளி விளையாட்டுக் கழகத்தை வெற்றி ஈட்டியது.இதில் மூன்றாம் இடத்தினை ஐக்கிய விளையாட்டுக் கழக விடத்தல் தீவு பெற்றது.

மேற்படி போட்டியில் மாந்தை மேற்கு மடு விளையாட்டத் துறைப் பொறுப்பாளர் ரங்கன் தலைமை தாங்கி வரவேற்பு உரை நிகழ்த்தினார். சிறப்புரையினை கி.பாப்பா ஆற்றினார். முதலாம் இடத்திற்கான வெற்றிக் கேடயத்தினை மன்னார் மாவட்ட புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் எஸ். சீசர் வழங்கி கௌரவித்தார். தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெற்று நன்றியுரையினை சென். அன்ரனிஸ் நெடுங்கண்டல் விளையாட்டுக்கழக செயலாளர் எஸ். கொண்சால் வழங்கினார். (சோ)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவருக்கு வரவு-செலவுத் திட்டத்தில் விமோசனமில்லை

## - வடமராட்சி வடக்கு க.கூ.ச. ரணிலுக்குக் கடிதம்

கடந்தகால யுத்த நடவடிக் கைகளால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளகுடாநாட்டு மீனவ சமூகத்திற்கு தற்போதைய வரவு-செலவு நிதி ஒதுக்கீட்டில் எந்தவிதமான விமோசனமும் கிட்டவில்லையென மீனவசங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இது தொடர்பாக மகஜரொன்றை வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்களின் சமாசம் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நேற்று அனுப்பி வைத்துள்ளது.

அம்மகஜரில் கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள குடாநாட்டு மீனவர்கள் மீண்டும் தமது தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க மானிய அடிப்படையில் மீன் பிடிஉபகரணங்களை வழங்கக் கோரியுள்ள சமாசம், அத்துடன் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மீன்பிடித் தொழிலை மேம்படுத்தப் பயிற்சிகள் வழங்குமாறும் கோரியுள்ளது.

இதேவேளை கரையோர மீன்பிடிக்கிராமங்களில் நிலவிவரும் குடிநீர் பிரச்சினை, குடியிருப்புவசதி கள் மற்றும் மீனவ குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளது கல்விவாய்ப்பு என்பவற்றிலும்அரசு கவனம் கொள்ள வேண்டுமென அவ்வறிக் கையில் கோரப்பட்டுள்ளது.

இதனிடையே யாழ்.பல்கலைக் கழகத்தில் கடல் வாழ் வளங்கள் தொடர்பான தனியான அலகொன்றை ஆரம்பிப்பதுடன், தற்போது இடம்பெற்றுவரும் கடல்வளங்கள் சார்பட்டப்படிப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும் மீனவ சங்கங்களின்சமாசம் அம்மகஜரில் கோரியுள்ளது. (27)

# ஜி-8 அமைப்பிலிருந்து ரஷ்யாவை அகற்ற முயற்சி;

# அமெரிக்க அமைச்சர்கள் குழு நடவடிக்கை!

## சனநாயகத்தை மதிக்கவில்லையென குற்றச்சாட்டு

**சனநாயகத்தை மதிக்கத் தவறினால் செல்வந்த நாடுகள் அங்கம் வகிக்கும் ஜி-8 அமைப்பிலிருந்து ரஷ்யாவை நீக்க வேண்டும் என்று அமெரிக்க அமைச்சர்கள் குழு வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பான வரைவுத் தீர்மானத்தை அவர்கள் காங்கிரசின் இரு அவைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.**

குடியரசுக் கட்சி, சனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இந்த அமைச்சர்கள் குழுவில் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் சமர்ப்பித்த வரைவுத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ரஷ்யாவில் அரசியல் எதிரிகள் மீது வழக்கு தொடரப்படுகிறது. பத்திரிகைகள் உட்பட தகவல் தொடர்பு சாதனங்களின் சுதந்திரம் ஒடுக்கப்படுகிறது. சனாதிபதி விளாடிமிர் புட்டின் எதிர்ப்பாளர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

செச்சினியா போரில் விதிமுறைகளை மீறி ரஷ்யா மிகவும் கொடுரப் போக்கில் நடந்து கொள்கிறது. இது நாகரிகம் மிக்க நாட்டின் செயலாகத் தென்படவில்லை. சனநாயகத்தை ரஷ்யா மதிக்கத் தவறினால் அதை ஜி-8 அமைப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது.

செல்வந்த நாடுகளில் அங்கம் வகிக்கும் ஜி-8அமைப்பில் தற்போது பிரிட்டன், அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், ரஷ்யா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

அமெரிக்காவில் ரஷ்யாவுக்கு எழுந்துள்ள கடும் எதிர்ப்பையே இந்த நடவடிக்கை புலப்படுத்துகின்றது என அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### நிதி ஒதுக்கீடு

வெளிநாடுகளிலுள்ள தமது தூதரகங்களின் பாதுகாப்பை வலுப்படுத்த அவுஸ்திரேலியா மேலதிகமாக 50 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட உத்தேசித்துள்ளது. பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இத்தாலி வெனிஸ் நகரில் வெள்ள நீர் மூடியுள்ள வீதியில் தனது பசுமாடொன்றை கூட்டிச் செல்லும் வயோதிபர் ஒருவர்.

# பாக்தாத்திற்கான புஷ்சின் இரகசியப் பயணம் அங்குள்ள நிலைமைகளைத் தெளிவுபடுத்துகிறது

## -அவதானிகள் தரப்பில் கருத்து

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் வியாழன் இரவு பாக்தாத்துக்கு மேற்கொண்ட விஜயத்தில் இருந்து பாக்தாத் நகரம் எவ்வளவு கடுமையான பாதுகாப்பிற்கு உட்படுத்தப் பட்டுள்ளது என்பது தெளிவாகியிருக்கிறது என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

விமானம் ஏவுகணையில் இருந்து தப்புவதற்காக வியாழக்கிழமை இரவாகியதும் சனாதிபதி புஷ் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பாக்தாத் சென்று இரண்டரை மணிநேரம் விமான நிலையத்திலேயே தங்கியிருந்துவிட்டுத் திரும்பியிருக்கின்றார்.

புஷ் பாக்தாத்தில் இருந்து திரும்பிய மறுதினம் நியூயோர்க் கின் சனநாயகக் கட்சி செனட்டரான கிலாறி கிளிங்டன் பாக்தாத்துக்கு விஜயம் செய்து அமெரிக்கத் துருப்புக்களையும் உயர் அதிகாரிகளையும் சந்தித்து உரையாடியுள்ளார்.



பாக்தாத்திற்கு திடீர் பயணமொன்றை மேற்கொண்ட அமெரிக்க சனாதிபதி புஷ் அமெரிக்கப் படை வீரர்களுடன் உணவுச்சாலையில்...

# தற்கொலைத் தாக்குதல் அச்சம் பிரிட்டனில் அதிரடி நடவடிக்கை

பிரிட்டனில் தற்கொலைக் குண்டுதாரி என சந்தேகிக்கப்பட்ட ஒருவரை விசாரணை செய்த பயங்கரவாத எதிர்ப்புப் பொலிசார் தென் மேற்கு இங்கிலாந்தில் இது சம்பந்தமாக மூன்று வீடுகளில் சோதனை நடத்தியுள்ளனர்.

லண்டனில் இருந்து மேற்கே 90 மைல் தூரத்தில் உள்ள கிராமப்புற நகரான இந்தப் பகுதியில் சோதனை நடத்திய பொலிசார் வீடொன்றில் இருந்து வெடி பொருட்களை மீட்டுள்ளனர்.

ஒரு விளையாட்டு மைதானம் அல்லது அரச குடும்பம் மீது பிரிட்டனின் முதலாவது தற்கொலைத் தாக்குதலை நடத்துவதற்கு மேற்படி நபர் திட்டமிட்டிருக்கலாம் என்று பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

முன்னர் விமானம் ஒன்றில் வைத்து காலணிக் குண்டொன்றை வெடிக்க வைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியைப் போன்று தற்போதும் காலணிக் குண்டொன்று இந்த சந்தேக நபரிடம் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பாதுகாப்பு சுவர் விவகாரம் சூடு பிடிக்கிறது; இஸ்ரேலின் அலட்சியத்திற்கு ஐ.நா. கண்டனம்

பலஸ்தீன பிரதேசமான மேற்குக் கரையினுள் இஸ்ரேலினால் கட்டப்பட்டுவரும் தடுப்புச் சுவரை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை விடுத்த கோரிக்கையை இஸ்ரேல் அலட்சியம் செய்துவிட்டது என்று ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

இதனால், பலஸ்தீன அதிகாரிகள் 191 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. பொதுச் சபையில் அடுத்த வாரம் முறையீடு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்று அனான கூறினார்.

இஸ்ரேல் அதன் மக்களை பயங்கரவாதத் தாக்குதலில் இருந்து காப்பாற்றிக் கொள்ளும் கடப்பாட்டைக் கொண்டிருக்கிறது எனத் தெரிவித்த அனான் அதற்காக பாதுகாப்பு சுவர் ஒன்றை அமைப்பது சர்வதேச சட்டத்தை மீறுவதாகவும் பலஸதீன மக்களின் பாதிப்புக்களை மேலும் அதிகரிப்பதாகவும் அமைகிறது எனவும் கூறியுள்ளார்.

இதற்கிடையில் காஸா பிரதேசத்தில் உள்ள யூதக்குடியேற்றத் திட்டம் ஒன்றின் அருகில் நேற்று முனதினம் இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனப் பொலிசார் ஒருவரைச் சுட்டுக் கொன்றுள்ளது.

# நீதிமன்றத் தீர்ப்பால் முதல்வர் பதவி விலகத் தேவையில்லை

## மாநில பா. ஜ. கட்சி நிலைப்பாடு

(சென்னை)

உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் ஜெயலலிதா பதவி விலக வேண்டிய அவசியமில்லை என தமிழக பாரதிய ஜனதா கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் மாநில பொதுச் செயலாளர் ஜி. குமாரவேல் கூறியதாவது, உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்காக முதலமைச்சரை பதவி விலகச் சொல்லமாட்டோம். தார்மீக பொறுப்பு ஏற்க வேண்டுமா? வேண்டாமா? என்பதை அவரே தீர்மானிக்க வேண்டும்.

அ. தி.மு.க.வுடன் உறவு வைக்க வேண்டாம் என்ற நிலையை நாங்கள் எதிர்க்கவில்லை. தேர்தலின் போதே அதனை முடிவு செய்வோம்.

மூன்றாவது அணி அமைக்க முயற்சிப்பதாக ஜெயலலிதா கூறியுள்ளார். அவ்வாறு அமைத்தாலும் அது தேர்தல் வெற்றி பெறாது என்று அவர் மேலும் கூறினார்.

# எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மேலை நாடுகள் அக்கறை செலுத்தவில்லை

## ஐ.நா. பொதுச் செயலர் அறிவிப்பு


உலக நாடுகளின் தலைவர்களை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

எயிட்ஸ் நோயே உண்மையான பாரிய அழிவு ஆயுதம் எனக் குறிப்பிட்ட அவர், பயங்கரவாத எதிர்ப்புக்கு செலவிடும் தொகையில் சிறு பகுதியைக்கூட அமெரிக்க ஐரோப்பிய அரசாங்கங்கள் எயிட்ஸ் நோய் எதிர்ப்பிற்கு பயன்படுத்தவில்லை என்று குற்றம்சாட்டியுள்ளார்.

இதனால் தான் மிகவும் கோபம் கொண்டிருப்பதாகக் கூறியிருக்கும் கொபி அனான் செல்வந்த நாடுகளில் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் எயிட்ஸ் நோய் ஆபிரிக்க நாடுகளில் உயிர் கொல்லியாக இருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உடல் உறவில் உரிய பாதுகாப்பை பேணுவதற்கு மக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்குமாறு ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களை கேட்டுக் கொண்ட போதிலும் அவர்கள் அதற்கு செவிசாய்க்கவில்லை எனவும் கொபி அனான் குற்றம் சாட்டியுள்ளார்.

உலகில் இதுவரை நான்கு கோடி மக்களும், இந்த வருடம் இதுவரை முப்பது இலட்சம் பேரும் எயிட்ஸ் நோய் காரணமாக மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



வட அயர்லாந்தின் சிம்பெய்ன் இயக்கத் தலைவர் ஜெரி அடம்ஸ் (இடது) மற்றும் அதன் உறுப்பினர் மேரி லோமக்டொனால்ட் ஆகியோர் மேற்கு வெல்ஸ் பாஸ்ட் நகரில் தேர்தல் குறித்து விளக்குகின்றனர்.

# கொங்கோவில் படகு விபத்து பெருமளவு சடலங்கள் மீட்பு!

கொங்கோ நாட்டில் ஏற்பட்ட படகு விபத்தொன்றில் இருநூறு பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என அஞ் சப்படுகின்றது.

சூறாவளி காரணமாக இந்தப் படகு மீது மற்றொரு படகு மோதியதாகக் கூறப்படுகின்றது.

ஆனால், இது பற்றி குறிப்பிட்ட கொங்கோவின் போக்குவரத்து அமைச்சர் ஒரு பயணிகள் படகு மட்டுமே பயணித்ததாகவும், இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

500க்கு மேற்பட்டவர்கள் பயணித்த படகு நீரில் மூழ்கியதால் இருநூறு பேர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுவதுடன் உயிரிழந்த 165 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் விபத்தில் சிக்கிய இருநூறுக்கு மேற்பட்டோர் உயிருடன் மீட்கப்பட்டுள்ள நிலையில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

# அமெரிக்க சனாதிபதித் தேர்தல் முடியும் வரை ஈராக்கில் படை விலகல் சாத்தியமில்லை



ஈராக்கில் தொடரும் தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. ஒன்று இரண்டு என பலியான அமெரிக்க பிரிட்டிஷ் கூட்டுப்படையினர் இன்றைய நிலையில் ஒரே நாளில் இருபத்து ஐந்திற்கும் அதிகமாக கொல்லப்படுகின்றனர்.

ஈராக்கில் சம நிலையை ஏற்படுத்தவே கூட்டுப் படைகள் அங்கிருப்பதாக கூறிக் கொண்ட அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ், இன்றைய காலகட்டத்தில் அமெரிக்கக் கூட்டுப் படையினதும், தன்னுடைய நிலையையும் சமநிலைக்குக் கொண்டு வர முடியாது திண்டாடிக் கொண்டிருக்கின்றார்.

உலக நியதிகளுக்குக் கட்டுப்படாது எடுத்தேன் கவிழ்த்தேன் எனும் செயற்பாட்டைப் போல தனது ஒரே கருத்தை நிலை விற்பன்னரான அமெரிக்க ஜொனா சாஸ்ஸர் அல்-ஹைதாவுக்கு சான்றிதழ் வழங்கியுள்ளமை, அமெரிக்காவினால் ஜீரணிக்கக் கூடிய ஒன்றல்ல.

மறுபுறம், உலகளாவிய பயங்கரவாதத்தைத் தடுப்பதாகக் கூறிக் கொண்டு நாடுகள் மீது போர் தொடுத்த அமெரிக்காவினால் இன்றுவரை அல்-ஹைதாவை செயலிழக்க வைக்க முடியவில்லை என்பது மறுக்க முடியாத உலகறிந்த உண்மையாகும்.

அதனால்தான் செப்டெம்பர் 11 தாக்குதல் போல் மீண்டும் அமெரிக்காவில் தாக்குதல் நடத்தப்படலாம் என்று அமெரிக்கப் புலனாய்வு நம்புகின்றது. பிற நாடுகளிலிருந்து விமானங்களைக் கடத்தி அமெரிக்காவின் அணுசக்தி நிலையங்கள், முக்கிய கட்டடங்கள், விமான நிலையங்கள் என்பனவற்றின் மீது அல்-ஹைதா குறி வைத்துள்ளதாக அமெரிக்கா நடுங்கிக் கொண்டிருக்கின்றது.

அது மட்டுமன்றி மிக அண்மையில் அமெரிக்க வெள்ளை மாளிகைக்கு மேலாக விமானம் ஒன்று பறந்துள்ளது. இதுவும் புதிய தலைவலியாக ஜோர்ஜ் புஷ்ஷிற்கு அமைந்துள்ளது.

ஜோர்ஜ் புஷ்ஷிற்கு கிடைத்த அவமரியாதையைப் பார்க்கையில் அது ரொனி பிளேயருக்கும் சேர்த்தே கிடைத்த ஒன்றாகவே கணிக்க முடியும்.

சதாம் ஹுசைனின் உருவச்சிலையை ஈராக்கில் இராணுவம் எப்படி சரித்து வீழ்த்தியதோ அதேபோல்தான் பிரிட்டனில் புஷ்ஷின் கொடும்பாவியும் சரித்து வீழ்த்தப்பட்டது. பின்னர் தீ மூட்டப்பட்டது.

இதைச் செய்தவர்கள் பிரிட்டனின் மாணவர்களே ஆகும். மாணவர்கள் மத்தியில் அதாவது, இளம் சமுதாயத்தின் மத்தியில் புஷ்ஷிற்கோ, ரொனி பிளேயருக்கோ மதிப்பு என்பது பூச்சியம்தான்.

இதேவேளை, லண்டன் ரைம்ஸ் பத்திரிகையின் அண்மைய கருத்துக் கணிப்பின்படி உலகளாவிய ரீதியில் அமெரிக்கா தனது மதிப்பை இழந்துவிட்டதாக 59 வீதமானவர்கள் கூறியுள்ளார்கள். ஈராக் மீதான போரை எதிர்ப்பவர்கள் 60சத வீதமானவர்கள் இருக்கின்றார்கள்.

ஈராக் மீதான போரினால் அமெரிக்காவினுள் மட்டுமன்றி உலகளாவிய ரீதியிலும் புஷ்ஷிற்கு எதிர்ப்பு வலுப்பெற்று வருகின்றது. இதனைச் சமாளிக்கவோ ஈடுகட்டவோ புஷ் தப்பித்துக் கொள்ளலாம். என்பதும் புஷ்ஷின இந்தத் திடீர் முடிவிற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனால், ஈராக்கின் அபுகரீப் எனும் பிரதேசத்தில் அமெரிக்கப் படையினர் ஆறுவயதுச் சிறுவனை யுத்த டாங்கி மூலம் நசுக்கிக் கொலை செய்துள்ளனர்.

இதனையடுத்து ஈராக்கில் அமெரிக்கப்படையினருக்கு எதிரான கொந்தளிப்பு அலை வலுவாக எழுந்துள்ளது. அதனால் புஷ் கூறுவது போலவோ நினைப்பது போலவோ ஈராக்கியர்கள் ஈராக்கின் பாதுகாப்புப் படையில் இணைந்து கொள்வார்களா? என்பது கேள்விக்குறி.

ஈராக்கை ஈராக்கியர்களிடம் ஒப்படைக்கப் போவதாக புஷ் அடிக்கடி கூறுவது வெறும் 'புஷ் வாணமாகவே' அமைந்துவிடும் போலுள்ளது.

இதுவரை ஈராக்கை ஈராக்கியர்களிடம் ஒப்படைப்பதாகப் புஷ் கூறுவது வெறும் வார்த்தைகளுடனேயே நின்று விடுகின்றது.

மறுபுறம் 2004ஆம் ஆண்டு ஜூன் மாதமே ஈராக்கின் ஆக்கிரமிப்பு முடிவு பெறுவதாக கூட்டுப்படைத் தலைமையகம் கூறுகின்றது.



அல்-ஹைதா தலைவர் ஒஸாமா பின்லேடன்

நாட்டிட விருப்பம் கொண்டு ஈராக்கை துவம்சம் செய்துள்ளது அமெரிக்கா.

ஆனால், இன்றோ அந்தச் செயற்பாட்டிற்கு பதிலடி போலே ஈராக்கில் கெரில்லாத் தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

சதாம் ஹுசைன் ஆட்சி செய்தபோது மக்கள் அவதியுடன் அனர்த்தங்களை சந்தித்தார்களா.... என்பதைவிட இன்றைய ஈராக்கில் மக்கள் பெரிதும் அவதிப்படுவது உண்மையே.

ஈராக்கில் களவு, கொலை, கலாச்சார சீர்கேடு என அங்கு நாளுக்கு நாள் அமைதி பறிபோய் கொண்டிருக்கின்றது. அமைதி ஏற்படுத்தவே அங்கு கூட்டுப்படை நிலை கொண்டுள்ளதாகக் கூறிய ஜோர்ஜ் புஷ், இன்றைய ஈராக்கின் நிலைபற்றி கவலை வெளியிட்டுள்ளார்.

அதேநேரம், ஈராக்கில் இராணுவக் கூட்டுப்படையினருக்கு அடுத்து அங்கு பலியாகிக் கொண்டிருப்பவர்கள் அரசியல் வாதிகளும், நீதிபதிகளும்தான் இவர்கள் சதாம் ஹுசைனின் கெரில்லாப் படைக்கு ஆதரவு அளிக்க மறுப்பதுடன் கூட்டுப் படைக்கு ஆதரவு அளிப்பதுமே காரணமாகும்.

இதேவேளை, கூட்டுப் படைக்கு ஆதரவு அளிப்பவர்கள் ஈராக்கின் துரோகிகள் என்றும், அமெரிக்கா நினைத்த மாதிரி ஈராக்கில் எதிர்ப்புக் குறைந்துவிடவே கூடாது என்றும், ஈராக்கின் தாக்குதலால் அமெரிக்கா திணற வேண்டும் என்று சதாம் ஹுசைன் அடிக்கடி

க. கலைவாணி

அரபு தொலைக்காட்சியில் அறைகூவல் விட்டு, மக்களை விழிப்படையச் செய்வதாக அமெரிக்காவே தற்போது குற்றம் சாட்டுகின்றது.

ஈராக்கில் தன்னால் அமைதியை ஏற்படுத்த முடியவில்லை என்பதை ஒப்புக் கொள்ள மறுக்கும் ஜோர்ஜ் புஷ், சதாம் ஹுசைனின் அறை கூவலினால்தான் ஈராக்கில் தாக்குதல்கள் நடத்தப்படுவதாக பழியை சதாம் மீது போட எத்தனிக்கின்றார்.

இதனிடையே அமெரிக்கா ஈராக்கைவிட்டு வெளியேற வேண்டும் என்று அடிக்கடி அல்-ஹைதா மிரட்டல் விட்டுக் கொண்டிருக்கின்றது.

அமெரிக்கா உட்பட உலக நாடுகளை அதிரடித் தாக்குதலுக்கு உள்ளாக்கும் திறமை உண்டு என உலக விவகார

ஏனெனில், செப்டெம்பர் 11 தாக்குதலையடுத்து வெள்ளை மாளிகைக்கு மேலாக விமானம் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அப்படியான பாதுகாப்பும், கட்டுப்பாட்டிற்கு மத்தியிலும் வெள்ளை மாளிகைக்கு மேலாக விமானம் பறந்துள்ளது என்றால்... அது அமெரிக்காவுக்கு அச்சத்தை உண்டாக்கும் நடவடிக்கைதானே?



ஈராக்கில் கெரில்லாத் தாக்குதல்

அத்துடன் இராணுவ அலுவலகத்திற்கு அந்திரெக்ஸ் அடங்கிய கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இராணுவ தலைமையகம் மட்டுமன்றி அமெரிக்க தபாலகங்கள் அனைத்துமே அல்லோலகல்லோலப்பட்டுள்ளன. இதனையடுத்து சில நாட்கள் தபாலகங்கள் மூடப்பட்டும் கிடந்தன.

அதேபோல் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு வெடிகுண்டுகள் அடங்கிய பொதி அனுப்பப்பட்டுள்ளது.

இவையனைத்தும் ஜோர்ஜ் புஷ் 'பயங்கரவாதத்தை' அழிப்பதாகக் கூறி நாடுகள் மீது போர் தொடுத்தாலும் அது அழிக்கப்படவில்லை; கட்டுப்படுத்தக்கூட முடியவில்லை என்பதைத்தான் எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

அதேநேரம் இத்தகைய நடவடிக்கைகள் யாவுமே புஷ்ஷின் கையை மீறிய வன்முறைகளையே தோற்றுவித்துள்ளது. இதனால்தான் உள்நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதா அல்லது ஈராக்கின் அமைதிக்கு இராணுவத்தை அனுப்புவதா என்றும் புஷ் அல்லாடிக் கொண்டிருக்கின்றார்.

இதேவேளை, பிரிட்டனுக்கு சென்ற

மிகுந்த பிரயாசைப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

அதனால்தான், ஈராக்கின் பாதுகாப்பிற்கு புதிதாக இராணுவத்தை அனுப்புவதில்லை என்றும், தற்போதுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் போலந்து இராணுவத்துடன் ஈராக்கியர்களையும் இணைத்து பாதுகாப்பை ஏற்படுத்தவுள்ளதாகவும் புஷ் புதிதாக முடிவொன்றைக் கூறிவருகின்றார்.

இந்த முடிவானது தன்னை இரண்டு வழிகளில் காப்பற்றும் என்பது புஷ்ஷின் நம்பிக்கையாக இருக்கலாம்.

ஈராக்கிற்கு இராணுவத்தை ஏனைய நாடுகள் அனுப்ப மறுக்கின்றன என்பதைவிட சம்மதிக்கும் நாடுகளும் அல்-ஹைதாவின் அச்சுறுத்தலால் பின்னடிக்கின்றன. அண்மையில் ஜப்பானும் ஈராக்கின் பாதுகாப்பிற்கு இராணுவத்தை அனுப்புவதாக முடிவு செய்தது. என்றாலும் அல்-ஹைதாவின் அச்சுறுத்தலையடுத்து தற்போது ஜப்பானும் பின்வாங்கியுள்ளது.

எனவே ஈராக்கிற்கு ஏனைய நாடுகளிடமிருந்து இராணுவ உதவி கிடைக்குமென்பது புஷ் கனவிலும் நினைக்க முடியாத ஒன்றாகும். அதனால் இந்த முடிவு நன்மையளிக்கலாம்.

அதேபோல் ஈராக்கில் தற்போது பலியாகும் அமெரிக்க இராணுவத்தின் தொகை அதிகரித்து வருகின்றது, ஈராக்கியர்களைப் பாதுகாப்பிற்குப் பயன்படுத்துவதன் மூலம், கெரில்லாத் தாக்குதல்களுக்குப் பலியாவது அதிகமாக ஈராக்கியர்களாகவே இருப்பார்கள்.

இதனால அமெரிக்காவில் எழுந்துள்ள படையினர் பலி எனும் சர்ச்சைகளிலிருந்தும்

இதைவைத்துப் பார்க்கும் போது ஈராக்கியர்கள் ஈராக்கை ஆள்வது என்பது வெறும் கனவாகவே இருக்கப் போகின்றதா? எனும் வினா எழாமல் இல்லை.

இவ்வாறான ஒரு தெரிவை ஏன் புஷ் முன்வைத்தார்? இதற்குக் காரணம் இல்லாமலில்லை.

அமெரிக்க முறைப்படி தேர்தல் நான்கு ஆண்டுகளின் முடிவில் நடைபெறும். இரண்டு நாட்களில் முடிவு வெளியாகும். சனவரி மாதத்தில் புதிய சனாதிபதி பதவி ஏற்பார். அது புஷ்ஷாகவும் இருக்கலாம். வேறு யாராகவும் இருக்கலாம்.

அதனால்தான் 2004 ஜூன் மாதம் ஈராக்கின் ஆக்கிரமிப்பு முடிவடைவதாக புஷ் கூறிக் கொள்கின்றார். அதற்கு முன்னர் ஈராக்கின் ஆக்கிரமிப்பு முடிந்து விட்டது என்றோ, ஈராக்கை அவர்களிடமே ஒப்படைப்பதாகவோ கூறவே மாட்டார்.

ஏனெனில் ஜோர்ச் புஷ்ஷிற்கு எதிராகப் போட்டியிடுபவர்கள் இதனையே தேர்தல் பிரச்சாரமாக கையாளக் கூடும் என்பது முக்கியமானது.

தேர்தல் முடிவடையும் வரை ஈராக்கை ஈராக்கியர்கள் ஆள்வார்கள் எனும் புஷ்ஷின் வாய்மொழி உறுதியும் இழுபட்டுக்கொண்டே செல்வது உறுதி.

அதனால்தான் சதாம் ஹுசைனைப் பிடிக்கும் வரை ஈராக்கில் போர் தொடரும் என பிரிட்டனில் புஷ் கூறியிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஆனால் ஈராக்கில் வலுவான சதாம் ஹுசைன் ஆட்சியை வீழ்த்துவதற்கு, புஷ் நிர்வாகம் பல கோடிகளை செலவு செய்து, சதாமின் ஆட்சியுடன் நெருக்கமான பலரை விலை கொடுத்து வாங்கியதால்தான் சதாம் ஹுசைனை மிக விரைவாகப் பதவி இறக்க முடிந்ததாகத் தற்போது உண்மைகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

அதேவேளை சதாமின் ஆட்சியை விலை கொடுத்து வீழ்த்த முடிந்த புஷ்ஷினால் ஏன் ஈராக்கில் விலைகொடுத்தாவது அமைதியை ஏற்படுத்த முடியவில்லை?

ஆனால் எத்தனை கோடிகளைக் கொட்டிக் கொடுத்தாலும் ஈராக்கியர்கள் அமெரிக்காவை அனுமதிக்கப் போவதில்லை. என்றாலும், மிகப்பழைய சிந்துவெளி நாகரிகம் தோற்றம் பெற்றதாகக் கூறப்படும் ஈராக்கை, இன்று அமெரிக்கா சின்னா பின்னப்படுத்தி விட்டது என்பதே உண்மையாகும். □

# கல்வியியற் கல்லூரி அனுமதி–2003 நேர்முகப்பரீட்சைக்கு தெரிவானோர்

**நேற்றையதொடர்ச்சி.....**

## ஆரம்பக் கல்வி-Primary

பா.ராதிகா-விசுவமடு மேற்கு, ம.ரஞ்சனா-வீரபுரம் வவுனியா, பா.பாலரஜினி-முழங்காவில் பூநகரி,க.சுதாகர்-யோகபுரம் கிளிநொச்சி,ரா.இதயபாஸ்-முல்லைத்தீவு,சு.பிரசாந்தி-தேவர்குளம் வவுனியா,ம.சசிகமாதேவி-துணுக்காய் முல்லைத்தீவு, க.கௌசலா-தோணிக்கல் வவுனியா,சி.கிருஸ்ணகுமார்-ஜெயந்திநகர் கிளிநொச்சி, யோ.கார்த்திகா-கண்டிவீதி வவுனியா,அ.ராஜரூபினி-பொன்னகர் முல்லைத்தீவு, ரா.சுதர்சன்-புதுக்குடியிருப்பு, த.கௌரி-கனகபுரம் கிளிநொச்சி, ந.தேவரூபன்-உருத்திரபுரம் கிளிநொச்சி,சு.கவிதா-பூவரசங்குளம் வவுனியா,பூ.தியானி-உதயநகர் கிளிநொச்சி, ர.கணேசலிங்கம்-விநாயகபுரம் இயக்கச்சி, ரா.சிறீகரன்-முள்ளியவளை, ச.நவநீதமோகன்-புதுக்குடியிருப்பு, ர.தயாளினி-வவுனியா, அ.ரசீகா-புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, க.தயாளினி-முள்ளியவளை முல்லைத்தீவு, தி.சிவரஞ்சன்-செட்டிகுளம் வவுனியா,ப.சுகன்ஜா-வவுனியா பு.சுதர்சிங்-வன்னேரிக்குளம் கிளிநொச்சி, பா.வசந்தன்-பூநகரி கிளிநொச்சி, பா.சதீஸ்வரன்-நொச்சிகுளம் வவுனியா, மு.நவதீபன்-பூநகரி கிளிநொச்சி; த.சாந்தினி-முழங்காவில் பூநகரி, பா.மோகனவிஜிதா-உருத்திரபுரம் கிளிநொச்சி, பா.அனுசியா-பளை கிளிநொச்சி, ச.பிரபாகரன்-நெடுங்கேணி வவுனியா, ந.மலர்விழி-தர்மபுரம் கிளிநொச்சி, ப.ஜெபச்செல்வி-வவுனியா, சொ.வனிதா-வவுனியா, த.சுகந்தினி-வாரிக்குட்டியூர் வவுனியா, ப.ஜெயதீபா-புதுக்குடியிருப்பு, கு.ஜெகதீசன்-யோகபுரம் முல்லைத்தீவு, அ.சசிகரன்-நெடுங்கேணி வவுனியா, க.மதனா-முள்ளியவளை முல்லைத்தீவு, ஜே.சத்யகௌரி-கிளிநொச்சி, செ.மோகனதாஸ்-உருத்திரபுரம் கிளிநொச்சி, ஜெ.ஜெயபிரதா-முல்லைத்தீவு, ஜோ.நிரோஜனா-தலைமன்னார், ச.ரஜினி-பூநகரி, ரா.உயந்தினி-சுந்தரபுரம் வவுனியா, அ.தேவபுதல்வி-ஓமந்தை வவுனியா, அ.ரேணுகா-உருத்திரபுரம் கிளிநொச்சி, வே.வேணுகோபால்-புளியங்குளம் வவுனியா, ரா.தயாளினி-பூநகரி கிளிநொச்சி, ச.சிவாநந்தராஜா-கணேசபுரம் கிளிநொச்சி, செ.சசிகலா-புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, ஜே.அன்ரனி மில்டன் குறுஸ்-பேசாலை மன்னார், த.ரேகலா-ஒட்டுசுட்டான், ஆ.யானகி-வவுனியா, ச.சிவகௌரி-புதுக்குளம் வவுனியா,அ.நந்தினி-அக்கராயன் கிளிநொச்சி, வெ.சகாயராஜன்-மன்னார், சு.ரூபாஜினி-மாங்குளம் முல்லைத்தீவு, ந.நந்திவர்மன்-தேட்டாதீவு வவுனியா, நா.கமலாம்பிகை-உயிலங்குளம் மன்னார், க.தயாளினி-புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, செ.டொரின் கிரிசாந்தி-புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, வி.சுதாகர்-முள்ளிவாய்க்கால் முல்லைத்தீவு, செ.மேரிடொரினா-புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, சு.பாமினி-முள்ளியவளை முல்லைத்தீவு, ல.ஜெயசுதன்-முத்தையன்கட்டு முல்லைத்தீவு, மோ.கிருஸ்ணாதேவி-கணேசபுரம் வவுனியா, வீ.சந்திரமோகன்-கதிர்சின்னக்குளம் வவுனியா, வி.கிருசாந்தன்-மல்லாவி, மு.ஜெயகௌரி-மகாறம்பைக்குளம் வவுனியா, பா.பிரசாத்-இராமநாதபுரம் கிளிநொச்சி, ஆ.வதனி-முல்லைத்தீவு, து.விஜிதா-சாஸ்திரி கூளாங்குளம் வவுனியா, நா.ஜெயலலிதா-பூநகரி, வி.ஜெகதாம்பாள் வட்டக்கச்சி, அ.கிருத்திகா-வவுனியா,பா.கமலராஜன்-முள்ளியவளை முல்லை,ம.ஐங்கரன்-பூந்தோட்டம் வவுனியா, பொ.சர்மிளா-உடையார்கட்டு, சி.தர்சன், வைரவபுளியங்குளம் வவுனியா, ஐ.லோகேஸ்வரி-திருநகர் மல்லாவி, ரா.துசாந்-முல்லைத்தீவு, வ.ராதாகிருஸ்ணன்-தர்மபுரம் கிளிநொச்சி, சோ.சுசிலாதேவி-ஒட்டுசுட்டான், நா.நிஷாந்தி-புதுமுறிப்பு கிளிநொச்சி, ப.ரங்கனீசியாஸ்-புதுக்குளம் வவுனியா, ந.ரமேஷ்-கல்வீரன்குளம் வவுனியா, ர.சுவியா-உதயநகர் கிழக்கு கிளிநொச்சி, ஐ.சந்திரகுமார்-மன்னார், சி.பகிரதன்-ஈச்சங்குளம் வவுனியா, அ.இந்துமதி-பளை கிளிநொச்சி, லோ.லோகராஜா-பூந்தோட்டம் வவுனியா, து.பிரதீபன்- சிதம்பரபுரம் வவுனியா, அ.ஜெயகௌரி-மகாறம்பைக்குளம் வவுனியா, சி.சாம்பவி-தரணிக்குளம் வவுனியா, தி.அன்ரனிட்டா ஸ்டெலா-கோயில்குடியிருப்பு முல்லைத்தீவு, சூ.மேரிமெசிகுலஸ்-வங்காளி மன்னார், சே.சத்தியசீலன்-சூசைப்பிள்ளையார்குளம் வவுனியா, மு.ரொஸ்லின் ரெஜினா-வவுனியா, ரா.கவிதா-பூநகரி, த.சந்திரலதா-பூநகரி, ல.ரோசரி மெரில்டா-வங்காளை மன்னார், டே.பெனிட்டா லம்பேட்டா-வங்காளை மன்னார், ச.பிரசாந்தி-புதுக்குடியிருப்பு, த.நிரஞ்சனா-அளம்பில் செம்மலை முல்லைத்தீவு, கு.யசோதா-செல்வபுரம் முல்லைத்தீவு, மு.ரமணீதரன்-சுதந்திரபுரம் உடையார்கட்டு, க.கவிதா-நெளுகுளம் வவுனியா, பா.எட்வின் லோவ்-புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, ந.புவிதரன்-கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சி, அ.வனிதா-நெளுக்குளம் வவுனியா, ஆ.சுதர்சினி-பூவரசங்குளம் வவுனியா, ஜோ.ஜெகதீஸ்வரன்-கனகாம்பிகைக்குளம் கிளிநொசசி, க.இதயபவன்-முல்லைத்தீவு, சி.காந்தகுமாரன் வவுனியா, மெ.காண்டீபன்-வவுனியா, த.சங்கீதா-முள்ளியவளை முல்லைத்தீவு, பா.திலீபன்-முல்லைத்தீவு, மு.ஜஸ்மின்-செட்டிகுளம் வவுனியா, க.கம்சபூசணி-வட்டக்கண்டல் மன்னார், த.நிர்மலா-மகாறம்பைக்குளம் வீதி வவுனியா, வே.தர்சினி-பளை கிளிநொச்சி, க.திருத்தாரினி-பரந்தன் கிளிநொச்சி, மு.கமலதாஸ்-பூந்தோட்டம் வவுனியா, சி.சிறிதரன்-அளம்பில் முல்லைத்தீவு, வ.ஜெயகாந்த்-முள்ளியவளை முல்லைத்தீவு, கு.பார்த்தசாரதி-ஓமந்தை வவுனியா, செனினுள் அப்பீள் ரமீட்ச்-பாவக்குளம் வவுனியா, ரா.தீபா-ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு, செ.துஷ்யந்தி-வைரவபுளியங்குளம் வவுனியா, ர.கண்ணன்-முல்லைத்தீவு, அ.கலையுகச்செல்வி-முல்லைத்தீவு, ஸ்ரீரஞ்சன் சத்தியமூர்த்தி-மருக்காரம்பளை வவுனியா, த.ஜெகதீசன்-முள்ளியவளை முல்லைத்தீவு, வி.ஜீவராஜினி-முள்ளியவளை முல்லைத்தீவு.

### சித்திரக்கலை

சு.ரஜேந்திரன்-வவுனியா, த.சந்திரலதா-பூநகரி, கிளிநொச்சி, சோ.சிவதேசன் வட்டக்கச்சி, கிளிநொச்சி, க.மீனா-வவுனியா, ஜே.ஜெயக்குமார்-மன்னார், க.நிமலன்-கரைச்சிகுடியிருப்பு முல்லைத்தீவு, ச.பிரியசாந்தி-வட்டக்கண்டல் மன்னார், அ.சுரேந்திரன்-பூநகரி, சி.சிவநாதராஜ்-கணேசபுரம் கிளிநொச்சி, ச.நிர்மலரூபன்-பொலிகண்டி தெற்கு முல்லைத்தீவு, வே.வேலவன்-ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு, பே.விஜிதா-வைரவ புளியங்குளம் வவுனியா, த.சியாலினி-ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு, கை.சுஜாதா-பூந்தோட்டம் வவுனியா, ம.சிரோன் மெலானி-வவுனியா, செ.அனுசா-எழுத்தூர் மன்னார், ஜெ.ஜெகரூபன்-புதுக்குடியிருப்பு, க.சாந்தினி-தோணிக்கல் வவுனியா, பா.மோகனரூபன்-பூநகரி கிளிநொச்சி.

### நடனம்

செ.செலோஜினி-வவுனிக்குளம் வவுனியா, ஜெ.வலன்டினா-வவுனியா, த.சகீதா-முள்ளியவளை, செ.சிவாஜினி-வவுனிக்குளம் வவுனியா, பூ.தயானி-உதயநகர் கிளிநொச்சி, செ.கமலினி-பூநகரி கிளிநொச்சி, ச.ஜெகரதி-முத்தையன்கட்டு முல்லைத்தீவு, கி.மன்சுகா முள்ளியவளை முல்லைத்தீவு பா.சிவமலர்-தோணிக்கல் வவுனியா, தி.தயாநிதி-கோவில்புதுக்குளம் வவுனியா, தா.சுகந்தினி-வற்றாப்பளை முள்ளியவளை, சி.பிரியானா-கிளிநொச்சி, த.இந்துசா-முத்தையன்கட்டு முல்லைத்தீவு, சி.ரதிதேவி-பூநகரி கிளிநொச்சி, அ.மலர்விழி-புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, சி.உதயகுமாரி-பூநகரி கிளிநொச்சி.

(தொடரும்)

# மாவீரர் நாளில் பிறந்த 14 குழந்தைகளுக்கு கிராமிய அ.வங்கியில் சேமிப்புக் கணக்கு ஆரம்பம்

–பதிவு செய்யாதோர் தொடர்புகொள்ள வேண்டுகை

**தமிழீழ மாவீரர் நாளன்று பிறந்த 14 குழந்தைகளுக்குக் கிராமிய அபிவிருத்தி வங்கி சிறுவர் சேமிப்புக் கணக்கொன்றை வங்கி சார்பாக ஆரம்பித்து வைத்துள்ளது.**

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு கிராமிய அபிவிருத்தி வங்கி நவம்பர் 27 ஆம் நாள் பிறந்த குழந்தைகளுக்குத் தளிர் சிறுவர் சேமிப்புக் கணக்கினை வங்கி சார்பாக ஆரம்பித்து வைத்திருப்பதாக ஏற்கனவே அறிவித்ததன் பிரகாரம் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த வகையில் வங்கியின் முல்லைத்தீவுக் கிளையினால் 03 ஆண் குழந்தைகளுக்கும் 01 பெண் குழந்தைக்கும், கிளிநொச்சிக் கிளையினால் 04 ஆண் குழந்தைகளுக்கும் 02 பெண் குழந்தைகளுக்கும் வவுனியா கிளையினால் 02 ஆண் குழந்தைகளுக்கும் 01 பெண் குழந்தைக்கும் மன்னார் கிளையினால் 01 பெண் குழந்தைக்குமாக மொத்தம் பதின்நான்கு குழந்தைகளுக்குத் தளிர் சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை வைத்தியசாலைகளில் பதிவுசெய்யப்படாதவர்கள் இருப்பின் அருகில் உள்ள கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளில் பதிவுகளை உடன் மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

# கட்டுரைப் போட்டியில் தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு

(வட்டக்கச்சி)

வடக்குக் கிழக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரைச்சிப் பிரதேசச் செயலகமும் கிளிநொச்சி வலயக்கல்வித் திணைக்களமும் இணைந்து முதியோர் சிறுவர் தின விழாவை முன்னிட்டு பிரதேச பாடசாலைகள் மட்டத்தில் நடாத்திய சிரேஷ்ர பிரிவுக் கட்டுரைப் போட்டியில் பங்குபற்றி 1ம்,2ம்,3ம் இடங்களை கிளி/வட்டக்கச்சி ம/வி மாணவர்கள் பெற்றனர்.

1ம் இடம் இ.சந்திரராஜ்
2ம் இடம் இ.குகராஜினி
3ம் இடம் த.கீதரோகினி

வெற்றி பெற்ற இம் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு பரிசுக்காக சிறந்த நூல்களைப் பெற்றுக் கொள்வதற்கு பணச் சான்றிதழும் வழங்கப்பட்டு இப்பரிசில் வழங்கும் நிகழ்வுகள் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் பொன்.நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இம் மாணவர்களுக்குப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர். (12)

# பேருந்து தரிப்பிடம் இன்மையால் பயணிகள் பெரும் அவலம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் பிரதான வீதியில் பேருந்து தரிப்பிடம் இன்மையால் பிரயாணம் செய்யும் மக்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

பிரதான வீதியில் உள்ள மூன்று தரிப்பிடங்கள் முற்றாக சேதமடைந்து விட்டன. இதில் இரண்டு தரிப்பிடங்கள் இருந்த இடம் கூடத தெரியாமல் அழிந்துள்ளன. ஏனைய மூன்று தரிப்பிடங்கள் சேதமடைந்து மழை ஒழுக்குகள் அதிகம் காணப்படுகின்றன. இவை ஆடு, மாடு போன்ற கால்நடைகளின் தரிப்பிடங்களாக உள்ளன. எனவே இவை யும் மக்கள் தரிப்பிடமாகப் பயன்படுத்த முடியாமல் உள்ளது. இதனால் சம்பந்தப்பட்டவர்கள் இதில் கவனம் எடுத்து சீர்செய்யுமாறு மக்கள் கேட்கின்றனர். (12)

## ‘டெங்கு’ நோய் தொடர்பாக விழிப்புடன் இருக்க வேண்டுகை

முல்லைத்தீவு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம் எதிர்நோக்கப்பட்டிருப்பதாக முல்லை மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

எனவே, நோய்க் கிருமிகள் பரவுவதைத் தடுக்கும் வகையில் மக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நீர் தேங்கி நிற்கக் கூடிய பொருட்களை வெட்டிப் புதைக்குமாறு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. (20)

-துணுக்காய் கல்வி வலயத்தில்-

# ஆசிரிய நியமன வெற்றிடங்களுக்கு புதியவர்களை நியமிக்க ஏற்பாடு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டோரின் அரைப் பங்கினர் தங்கள் கடமைகளை இதுவரை பொறுப்பேற்கவில்லை. இதனால் புதியவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படலாம் என உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இருபது பட்டதாரி ஆசிரியர்கள் 2003.10.31ஆம் திகதிக்கு முன் கடமையேற்குமாறு நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தும் இதுவரை 05 விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களும், 02 நுண்கலைப்பட்டதாரி ஆசிரியர்களும் 03 வர்த்தகப் பட்டதாரி ஆசிரியர்களும், 01 கலைப்பட்டதாரி ஆசிரியரும் கடமை ஏற்றுள்ளனர்.

கனித விஞ்ஞான ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருக்கும் இவ்வலயத்திற்கு 13 விஞ்ஞானப் பட்டதாரிகள் நியமிக்கப்பட்டிருந்த போதும் ஐந்து பேர் மட்டும் கடமையேற்றுள்ளனர். எனினும் கடமை ஏற்காதவர்களுக்குப் பதிலாகப் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேசமயம் இவ்வலயத்தில் இருந்து 14 ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர். நான்கு ஆசிரியர்கள் மட்டும் இவ்வலயத்திற்கு மாற்றலாகி வருகின்றனர் என வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் விஜயபாலா தெரிவித்தார். (24)

# தாழ்ந்த பிரதேசங்களில் பயிர்ச்செய்கை பாதிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த இரு தினங்களுக்கு மேலாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாகத் தாழ்ந்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை மற்றும் பயிர் வகைகள் நீரில் மூழ்கியுள்ளன.

இந்நிலை மேலும் நீடிக்குமானால் பயிர்கள் அழிவுக்குள்ளாகும் அபாயம் ஏற்படும் என்று விவசாயிகள் அஞ்சுகின்றனர். கிராமப்புறங்களுக்கான போக்குவரத்துக்கள் சில வீதிகளில் வெள்ளம் பாய்வதனால் பாதிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் மழை பெய்துகொண்டே இருக்கின்றது.

# தமிழீழ தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகள் ஐரோப்பிய நாடுகளில் சிறப்புற அனுஷ்டிப்பு

-கலாநிதி அன்ரன் பாலசிங்கம் லண்டனில் சிறப்புரை

**தமிழீழ தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகள் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் பரவலாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. லண்டனில் எதிர்வரும் 6-ம் திகதி நடைபெறவுள்ள நிகழ்வில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சிறப்புரை ஆற்றவுள்ளார்.**

பிரான்ஸ்,இத்தாலியில் கலிமோலெச்சே ஆகிய இடங்களிலும் மற்றும் நோர்வேயிலும் இன்று மாவீரர் தின நிகழ்வு நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 6 ஆம் திகதி பிரித்தானியா,நெதர்லாந்து அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்திலும் இத்தாலியில் றெஜீயா,இம்லியா ஆகிய மாநிலங்களிலும் தேசிய மாவீரர் தின நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதனை அடுத்து எதிர்வரும் 7 ஆம் திகதி ஒஸ்லோவிலும் 13 ஆம் திகதி அமெரிக்காவின் சான் பிறன்ஸ்சிஸ்கோவிலும் மாவீரர் நாள் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

புலம்பெயர்ந்தோர் வாழும் நாடுகளில் நடைபெறவுள்ள பிரதான மாவீரர் நாள் நிகழ்வுகளில் தாயகத்தில் இருந்து வருகை தந்திருக்கும் முக்கியஸ்தர்கள் சிறப்புரையாற்றவுள்ளனர்.

லெப்.கேணல் நவம் அறிவுக் கூடப் பொறுப்பாளர் கலைக்கோவன் இத்தாலியிலும், சுவிசிலும், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி இத்தாலியிலும், ஜேர்மனியிலும்,சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித் தளபதி அமிர்தாப் பிரான்ஸ்,நோர்வே ஆகிய நாடுகளிலும் சிறப்புரையாற்றுகின்றனர்.

எதிர்வரும் 6 ஆம் திகதி லண்டன் எக்சல் மண்டபத்தில் நடைபெறவுள்ள தேசிய மாவீரர் நாள் நிகழ்வில் தமிழீழ விடுலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்ற இருக்கின்றார்.

## நீர் திறப்பு

(முல்லை)

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தின் மேலாக நீர் பாய்ந்ததையடுத்து ஆற்று நீர் கடலுக்குள் செல்லும் வகையில் நேற்றைய தினம் வெட்டி விடப்பட்டது. (20)

# வட.கிழக்கில் 13 பாலங்களை புனரமைக்க நடவடிக்கை

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் வடபகுதியில் சேதமடைந்த நிலையிலுள்ள 13 பாலங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு மீள்குடியமர்வு புனரமைப்பு மற்றும் அகதிகள் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நாவற்குழிப்பாலம், கைதடிப் பாலம், வண்ணாத்திப்பாலம், புலோலி, வரணிப்பாலம், வெள்ளாங்குளம், தள்ளாடி வீதியிலுள்ள 04 பாலங்கள் மற்றும் முல்லைத்தீவு வீதியிலுள்ள 05 பாலங்கள் என மொத்தம் 13 பாலங்கள் புனரமைப்புச் செய்யப்படும்.

இதற்கென பிரிட்டிஷ் அரசாங்கம் 30 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. இப்பாலங்களின் புனரமைப்புப் பணிகள் டிசம்பர் மாதத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் என அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் மொத்தம் 89 பாலங்கள் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய நிலையில் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

# திருகோணமலை வன்முறைச் சம்பவங்களுக்கு மூன்றாம் தரப்பொன்று பிரதான காரணம்

-சிறிலங்கா உள்துறை அமைச்சு கூறுகிறது

திருகோணமலை மாவட்டத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்றவன் முறைச் சம்பவங்களுடன் மூன்றாம் தரப்பு ஒன்றுக்கு சம்பந்தம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக சிறிலங்காவின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான ஆதாரங்கள் தனக்கு கிடைக்கப் பெற்றிருப்பதாக திருமலைப் பொலிஸ் அறிக்கைகளை மேற்கோள் காட்டி உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

பதில் பொலிஸ்மா அதிபர் ரி.எல்.டி சில்வா இது தொடர்பாக உள்துறை அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்களும் அந்த ஊடக அறிக்கையில் விபரமாகத் தரப்பட்டுள்ளது.

திருமலை மாவட்டத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவங்கள் பற்றி பரவிவரும் பல்வேறு வதந்திகளினால் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையே அமைதியின்மை தோன்றக்கூடிய வாய்ப்புக்கள் தோன்றியிருப்பதனாலேயே இந்த விபரங்கள் வெளியிடப்பட்டதாகவும் இவ் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 23ஆம் திகதி கிண்ணியா பொலிஸ் பிரிவில் கள்ளச்சாராயம் காய்ச்சிக் கொண்டிருந்த வேளையில் இடம் பெற்ற வெடிச் சம்பவத்திலேயே நால்வர் காயங்களுக்கு உள்ளானதாகவும் அந்த அறிக்கை இந்த வெடிச்சம்பவம் குண்டுத் தாக்குதலில் இடம் பெற்றதா? அல்லது சாராயம் காய்ச்சும் போது இடம்பெற்றதா என்பது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்று 24ஆம்,25ஆம் திகதிகளில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களையும் தெரிவித்துள்ள அந்த அறிக்கை இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்களின் நோக்கம் என்னவென்பதோ தாக்குதலை மேற்கொண்டவர் யார் என்பதோ இன்னமும் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கின்றது.

இந்த சம்பவங்களுடன் மூன்றாவது சக்தி ஒன்று சம்பந்தப்பட்டிருப்பதற்கான ஆதாரங்களைப் பொலிசார் கண்டு பிடித்திருப்பதாகவும் கூறியிருக்கிறது.

தமிழ்,முஸ்லிம் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்துவதற்காகவே இந்தத் தாக்குதல்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கை மேலும் கூறுகின்றது.

## இயங்கவைக்க நடவடிக்கை

(முல்லை)

முல்லை மாவட்ட தொழில் சார் திணைக்களத்தை வெகு விரைவில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இயங்கவைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. (20)

# 10 அறுவடை இயந்திரங்கள் முல்லைக்கு வழங்க ஏற்பாடு

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகளின் நன்மையினைக்கருதி 10 அறுவடை இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

நெக்கோட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் வழங்கப்படவுள்ளது.

அளம்பில், கொக்குத் தொடுவாய், குமுழமுனை, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, ஒலுமடு, துணுக்காய், பாண்டியன்குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவிலேயே இவை வழங்கப் படவுள்ளன. என கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் தெரிவித்தார். (20)

# ரூ.6கோடி பெறுமதியான ஹெரோயின் கொழும்பில் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு பொரளைப் பகுதியில் நேற்று முன்தினம் ஆறு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைவஸ்து கைப்பற்றப்பட்டுள்ளது.

23 கிலோ 300 கிராம் நிறை கொண்ட ஹெரோயின் போதைப் பொருளே பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் ஹெரோயின் போதைவஸ்து விற்பவர் என்ற குற்றச்சாட்டில் பத்து வருடமாக பொலிசாரால் தேடப்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# பொதுநலவாயத்தின் பொதுச் செயலர் பதவிக்கு கதிர்காமர் போட்டியிட பலத்த எதிர்ப்பு

பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் பதவிக்கு சிறிலங்கா சனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் போட்டியிடவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் நைஜீரியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பு நாடுகளின் கூட்டத்தில் இந்த அமைப்பின் பொதுச் செயலாளருக்கான தேர்தல் இடம் பெறவுள்ளது.

இந்தப் பதவிக்கான வேட்பாளராக லக்ஷ்மன் கதிர்காமரை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பிரேரித்திருப்பதுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவரை வழிமொழிந்துள்ளார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த கதிர்காமர், தான் பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளராகப் பதவியேற்றால் சிறிலங்கா சிறந்த ஒரு சேவகனை இழந்து விடும் என்று பலர் தெரிவித்திருப்பதாகக் கூறினார். ஆனாலும் எங்கிருந்தாலும் தனது நாட்டுக்கான சேவையை தான் செய்து தரப்போவதாக அவர் கூறியுள்ளார்.

இதுவரை இப்பதவியில் வெள்ளை இனத்தவரே இருந்திருப்பதாகவும் ஆசிய கறுப்பினத்தவர் ஒருவர் அந்தப் பதவிக்கு வர வேண்டும் என்பதனாலேயே தான் இந்தப் போட்டியில் கலந்து கொள்வதாகவும் கதிர்காமர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா சனாதிபதிக்கு உறுதுணையாக இருந்து சமாதானத்துக்கான போர் என்ற கோசத்துடன் தமிழர்களைக் கொன்று குவிப்பதில் முன்னணியில் இருந்தவர் இந்தக் கதிர்காமர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரை இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யக் கூடாது என்று பல தமிழர் அமைப்புக்களும் பொது நலவாதிகளும் கேட்டுள்ளனர்.

-ஈச்சந்தீவில் தங்கியுள்ள-

# தமிழருக்கான நிவாரணப் பொருட்கள் ஆயுதக் குழுவொன்றினால் தடுப்பு

கிண்ணியாப் பகுதியில் இடம் பெயர்ந்து ஈச்சந்தீவுப் பகுதியில் அகதிகளாகத் தங்கியிருக்கும் தமிழர்களுக்கு நிவாரணப் பொருட்களை ஏற்றிச் சென்ற லொறிகளைக் கிண்ணியாப் பகுதியில் வைத்து இளைஞர் குழுவொன்று தடுத்து நிறுத்தித் திருப்பியனுப்பியுள்ளது.

கிண்ணியாப் பகுதியில் இடம் பெற்ற மோதல்களையடுத்து ஏற்பட்டுள்ள பதற்றநிலை காரணமாக ஆலங்கேணிப் பகுதியைச் சேர்ந்த 101 குடும்பங்கள் ஈச்சந்தீவு தமிழ் மகாவித்தியாலயத்தில் அகதிகளாகத் தங்கியுள்ளார்கள்.

அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள இவர்களுக்கு முஸ்லிம் வர்த்தகர்கள் எவரும் உணவுப் பொருட்களை விற்பனை செய்யக் கூடாது என இங்குள்ள ஆயுதக்குழு ஒன்றினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் 101 குடும்பங்களைச் சேர்ந்த 468 பேர் உணவின்றி நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனையடுத்துத் திருகோணமலை அரச அதிபர் லொறிகள் மூலம் பொருட்கள் எடுத்துச் செல்ல ஆவன செய்திருந்தார்.

எனினும் லொறிகளை கிண்ணியா பகுதியில் இளைஞர் குழுவொன்று மிரட்டி திருப்பியனுப்பியுள்ளது.


## 5ஆம் ஆண்டு ஆறாத்துயர நினைவுகள்

அன்னை மடியில்
25
□
11
□
1977



அன்னியன் வலையில்
25
□
11
□
1998

கிளி/ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த

**சத்தியநாதன் தமிழ்க்குமரன்**

(மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல்பீட மாணவன் (NDT)

திதி 30-11-2003

அன்பு மகனே குமரா ..................
ஆண்டுகள் ஐந்து மின்னல் போல்
மறைந்ததடா சிறகொடிந்த
பறவை போல் உன் பிரிவால்
துடிக்கின்றோம் உயிரின் பெறுமதி
தெரியாத கயவர்கள் ஏன் தான்
உன்னை தீண்டினார்களோ .......
இது தமிழனின் தலைவிதியோ.......

தெய்வமே குமரா உன் பிரிவால் துயர்படும் அம்மா, அப்பா, அன்பு சகோதரங்கள், உன் பரிசுத்தமான ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்கந்தபுர நடனவிநாயகர் துணை வேண்டுகிறோம்.

தகவல்:-
சண்.சத்தியநாதன்
[பிள்ளையார் களஞ்சியம்]
மல்லாவி
யோகபுரம்.

உன்நினைவோடு
அன்பு அப்பா,அம்மா
சகோதரங்கள்
அண்ணி,
பிள்ளைகள்.

(சி-8914)



O/L-2003

பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்

D.M.I.

யாழ்.நகர்

(சி-8915)



**சிந்தனைக்கு**

எந்தவொரு விடுதலைப்போராட்டத்திலும் எதிரியானவன் தனது இயலாத் தன்மையால் வெகுசனம் மீது மூர்க்கத்தனமாகப் பழிதீர்த்துக் கொள்ளத் தயங்குவதில்லை.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 30-11-2003

# குற்றச்சாட்டுக்கள்

"இந்த நாட்டில் தொடர்ச்சியாக மாறி மாறி ஆட்சி புரிந்து வந்த கட்சிகள் மேற்கொண்ட தவறான செயற்பாடுகள் காரணமாகவே இன்றைய நெருக்கடி நிலை தோன்றியுள்ளது" என்ற சனாதிபதி சந்திரிகாவின் குறை கூறுதல் முற்றிலும் சரியானதே. எனினும், சனாதிபதி சந்திரிகா இக்குற்றச்சாட்டின் மூலம் தம்மீதும் குற்றம் சாட்டிக் கொள்கின்றார் என்பது வேடிக்கையானது.

மாறி மாறி ஆட்சி புரிந்த கட்சிகள் என்ற ரீதியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இவற்றிற்கு பொறுப்பேயாயினும், கட்சி என்ற ரீதியில் ஒட்டு மொத்தமாக அக்கட்சியில் அங்கம் வகித்த அனைவரும் இவற்றிற்குப் பொறுப்பு என்பதை விட இக்கட்சிகளுக்குத் தலைமை வகித்தவர்கள், அன்றி பரம்பரையாக அக்கட்சியை வழி நடத்திய குடும்பங்கள் என்பனவே முக்கிய பொறுப்பாகும். ஏனெனில் சிறிலங்கா அரசியலில் ஆட்சியாளர்கள் என்பவர்கள் பண்டாரநாயக்க குடும்பத்தினரும், டி.எஸ். சேனநாயக்க மற்றும், ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் குடும்பத்தினருமே ஆகும். இந்த வகையில் பார்க்கையில், சனாதிபதி சந்திரிகா சுமத்தும் குற்றச்சாட்டானது சிறிலங்கா சுதந்திரக்கட்சிமீதும், அதன் தலைமை ஏற்றுநடத்தும் பண்டாரநாயக்க குடும்பத்தின் மீது வீழ்வதும் பொருத்தப்பாடானதே.

பண்டாரநாயக்கவைப் பொறுத்து, அவர் இனப் பிரச்சினைத்தீர்விற்கான நெருக்கடிக்குத் தீர்வுகாண முற்பட்டவர் அல்ல. அவர் புகைந்து கொண்டிருந்த இனப் பிரச்சினையை கொழுந்துவிட்டு எரியச் செய்தவர். அவரின் தனிச்சிங்கள மசோதாவே இலங்கை அரசியலையும், இனப் பிரச்சினையையும் புதியதொரு கோணத்தில் திருப்பியதாகியது.

இதன் பின்னர் பண்டாரநாயக்கவின் மனைவியான சிறிமாவோபண்டாரநாயக்க 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் மூலம் சிறுபான்மை மக்களின் சட்டரீதியிலான பாதுகாப்பை இல்லாது ஒழித்தார். சிறுபான்மை இனத்தவர், தனிநாடு ஒன்றின்மூலமே தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்ற நிலையை உருவாக்கினார். இதன் பின்னர், ஆட்சிப்பொறுப்பிற்கு வந்த பண்டாரநாயக்க குடும்ப வாரிசான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாண முடியாது நிலையை மோசமாக்கினார். சமாதானப் பேச்சுவார்த்தை மூலம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமெனத்தேர்தல் வாக்குறுதி கொடுத்து ஆட்சிக்கு வந்த சந்திரிகா பதவியேற்று சில மாத காலத்திற்குள் யுத்தத்திற்குத் திரும்பினார்.

பண்டாரநாயக்க குடும்பத்தின் ஆட்சியானது இவ்வாறாக இருக்கையில், சிறிலங்காவில் முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் ஐ.தே.கட்சியும் இதற்குச் சளைத்ததல்ல. இவர் காலத்தில் தான் மலையக மக்களின் பிரஜா உரிமை மற்றும் வாக்குரிமைகள் பறிக்கப்பட்டன. வறள் வலய அபிவிருத்தியென்ற ரீதியில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவியதன் மூலம் நில ஆக்கிரமிப்பிற்கு வித்திடப்பட்டது.

டி.எஸ். சின் வாரிசான டட்லி சேனநாயக்க தந்தையாரின் பணியைத் தொடர்ந்ததோடு, இனப்பிரச்சினைக்குத் தந்தை செல்வநாயகம் அவர்களுடன் உடன்பாடு ஒன்றைக் கண்டிருந்தார். ஆயினும், அவ்வுடன்பாடு கூட அமுலாக்கம் பெறவில்லை. சிங்களப் பேரினவாதத்தின் வற்புறுத்தலுக்குப் பணிந்தே சென்றார். ஆனால், அதன் பின்னர் டி.எஸ்.சேனநாயக்கவின் வாரிசுகள் இல்லாது போயினும் ஐ.தே.கட்சியின் கொள்கைகளில் ஊறித்திளைத்தவர்களை ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், பிரேமதாசவும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் மருமகனுமான ரணில் விக்கிரமசிங்கவும் ஆட்சிக்கு வந்தனர். இவர்கள் கடைப்பிடித்தகொள்கைகள் பொதுவில் இனப்பிரச்சினைக்குஅரசியல் தீர்வு என்பது சாத்தியமற்றது என்றாக்கியது. இனக்கலவரங்கள், யுத்தம் என்பனவற்றிக்கு வழிசமைத்தது. இனப்பிரச்சினை அரசியல் பேச்சுக்கள் மூலம் தீர்த்துவைக்கப்படும் எனக் கூறிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டதோடு மட்டுமல்ல, அந்நியநாட்டு இராணுவத்தையும் யுத்தத்தில் ஈடுபடுத்தும் அளவிற்குச் சென்றார். அதன் பின்னர் பிரேமதாசவும் யுத்தப்பிரியராகவே யுத்தத்தை நடத்தினார்.

அதாவது மாறி மாறி ஆட்சி செய்த கட்சிகள் அவற்றை வழிநடத்திய தலைவர்கள் அனைவருமே இன்றைய அரசியல் நெருக்கடிக்குக் காரணமாகும். இந்தவகையில் சனாதிபதி சந்திரிகாவின் கூற்றுக்கள் சரியானவையேயாயினும், கடந்தகால ஆட்சியாளர் என்ற ரீதியில் அவரும் இத்தகையதொரு நெருக்கடி ஏற்படுவதற்குக்காரணமாகும்.

ஆனால், இன்றைய ஆட்சியாளர்கள்,எதிர்க்கட்சிகள் யாவுமே சனாதிபதி சந்திரிகாவின் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்கின்றனர். அதனை வெளிப்படுத்துகின்றனர். ஆனால், இன்றுள்ள வேடிக்கையும் துயரமும் என்னவெனில், இவர்களும் தொடர்ந்தும் நெருக்கடிகளை அதிகரித்துச் செல்பவர்களாக இருப்பதுதான். அதாவது, இனப்பிரச்சினைக்கான நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு இவர்கள் முன்வருவதில்லை என்பதேயாகும்.

இன்று முன்னைய ஆட்சியாளர்களைக் குறைகூறும் சனாதிபதி தனது முதல் பதவிக்காலத்தில், இனப்பிரச்சினையை என்றுமில்லாதவாறு நெருக்கடிக்கு உள்ளாக்கியவர். இதேவேளை, தனது இரண்டாவது பதவிக்காலத்தை சமாதான முயற்சிகளுக்கு எதிராகப் பயன்படுத்துவதில் முனைப்புடன் செயற்பட்டவர். இந்தநிலையில், சனாதிபதி சந்திரிகா போன்றவர்கள் முன்னைய ஆட்சியாளர்களை மட்டும்குறைகூறுவதில் என்னபயன் உண்டு. இத்தகைய குற்றச்சாட்டுக்களைச் சுமத்த அவருக்கு எத்தகைய அருகதையுண்டு.

# தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் உரை அரசியல் நேர்மை, உறுதிப்பாட்டின் வெளிப்பாடு!

## அமைச்சர் பி.சந்திரசேகரன் கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆற்றிய மாவீரர் நாள் உரை அவரது அரசியல் நேர்மையையும் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தியிருப்பதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரன் கூறியுள்ளார்.

தென்னிலங்கை இனவாத அமைப்புக்கள் தேசியத் தலைவரையும் அவரது செயற்பாடுகளையும் சிங்கள மக்கள் மத்தியில் பூதாகாரமானதாகவும் விசமத்தனமானதாகவும் பிரச்சாரம் செய்து வந்த நேரத்தில் அவரது உரை சகல தென்னிலங்கை மக்களையும் சிந்திக்க வைத்திருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்தகைய பிரச்சாரத்தை முற்றாக முடிக்கும் விதத்தில் பிரபாகரன் அவர்கள் தனது அரசியல் நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக் கூறியிருப்பதாக குறிப்பிட்டிருக்கும் அமைச்சர் சந்திரசேகரன் விடுதலைப் புலிகளை பேரினவாதிகள் சரியாகப் புரிந்து கொள்ளா விட்டால் இதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு அவர்களை குறைகூற முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையான விட்டுக் கொடுப்போடு, சகிப்புத் தன்மையோடு சனநாயகத்துக்காகவும் சமூக நலனுக்காகவும் செயற்படும் விடுதலைப் புலிகளை சர்வதேச சமூகங்கள் புரிந்து கொள்வதோடு அவர்களை தடைசெய்துள்ள சர்வதேச நாடுகள் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீககிவிட முன்வர வேண்டும் எனவும் அமைச்சர் சந்திரசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இடைக்கால நிர்வாகம் அமைந்த பின்னரே வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு!

## -நிதியமைச்சர் பாராளுமன்றத்தில் அறிவிப்பு

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை அமைந்த பின்னர் தான் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான அபிவிருத்திக்குரிய நிதிகளை ஒதுக்க முடியும் என சிறிலங்காவின் நிதியமைச்சர் கே.என். சொக்ஸி கூறியுள்ளார்.

வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்த வரவு-செலவுத் திட்டத்தினால் மக்கள் நன்மை அடைந்துள்ளனர். இது முடிவு அல்ல, ஆரம்பமே. விவாதத்தின் போது உங்களினால் முன்வைக்கப்பட்ட சிலமாற்று யோசனைகளை நாங்கள் பரிசீலிப்போம். எல்.பி. காணி விடயம் மிகவும் பிரதானமானது. அதன் விலையைக் குறைப்பது தொடர்பாக மேலதிகமான பரிசீலனைகளை மேற்கொள்ளவுள்ளோம். வற்வரி குறைப்பினால் உடைகள், உணவு வகைகள் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைவடையும்.

மேலும் பல பொருட்களுக்கான விலைகளைக் குறைக்க நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன்களுக்கான வட்டி வீதம் 4 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மீனவர்களுக்கான சலுகைகளிலும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள அங்கு இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டும். அதன் பின்னரே தீர்க்கமான முடிவுகளை எடுக்க முடியும். அவ்வாறு இடைக்கால நிர்வாகம் அமைந்த பின்னர் அந்தப் பிரதேச உறுப்பினர்களின் ஆலோசனைகளைப் பெற்று அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளலாம்.

ஆனால் வரவு- செலவுத் திட்டத்தில் வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கான அபிவிருத்திக்குரிய கணிசமான உதவிகள் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் செய்யப்படுகின்றது.

முன்னைய அரசாங்கம் பட்ட கடன்களை அடைப்பதற் காகவே பாதுகாப்புச் செலவுக்கான நிதி அதிகரிக்கப்பட்டிருக்கின்றது என்று கூறினார்.

# நல்ல மனிதராக காணப்பட்ட ரணில் தற்போது எதிர்மறையாக செயற்படுகிறார்

## அமைச்சர் தொண்டமான் சாடல்

இரு பிரதான கட்சிகளும் சேர்ந்து அரசை அமைக்குமானால் நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து செயற்படவிருப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தலவாக்கலையில் நடந்த கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் காங்கிரஸ் உதவியின்றி இரு பிரதான கட்சிகளும் சேர்ந்து அரசமைக்க முடியாதென அவர் மேலும் தெரிவித்தார். ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் 20 வருடயுத்தத்திற்கு முடிவு கண்டு சமாதான முயற்சியை முன்னெடுத்துச் சென்றபோது நாங்கள் எங்களது பூரண ஆதரவை வழங்கினோம். அந்த நேரம் நல்ல மனிதராகக் காணப்பட்டார். தற்போது எதிர்மறையாகச் செயற்படுகிறார் எனத் தோன்றுகின்றது என்றார்.

விவசாய அமைச்சர் முத்துலிங்கம் உரையாற்றுகையில், பிரஜா உரிமை பெற்ற பின்பு தோட்டத்தொழிலாளர்கள் இந்நாட்டுப் பிரஜைகள்.

அரசாங்கம் என்னுடையது என சந்திரிகா கூறுகிறார். இல்லை அரசாங்கம் என்னுடையது என ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். எல்லோரும் ஆறுமுகம் தொண்டமானை அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள் என முத்துலிங்கம் மேலும் கூறினார்.

# கால்பந்தாட்டத்திற்கு ஆதரவளிக்காமையையிட்டு இந்தியா மீது அதிருப்தி

நூறு கோடிக்கும் அதிகமான மக்களைக் கொண்ட ஒரு நாடு அதில் இருந்து 11 கால்பந்து வீரர்களை உருவாக்க முடியாதா என ஆசிய கால்பந்தாட்டக் கூட்டமைப்பு இந்தியா மீது கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இது குறித்து ஆசிய கால்பந்தாட்ட கூட்டமைப்பு தெரிவிக்கும் போது,

இந்தியாவின் கால்பந்து விளையாட்டின் வளர்ச்சி கிரிக்கெட்டால் கெடுகின்றது என இந்தியக் கால்பந்து நிர்வாகம் கூறுவதை ஏற்கவே முடியாது.

கிரிக்கெட் அங்கு பிரபலமாக இருந்தாலும் இன்னும் நிறையப் பேர் கால்பந்தை ரசிக்கிறார்கள்.

நூறு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நாட்டில் ஒழுங்காக அக்கறை செலுத்தினால் தரமான 11 கால்பந்தாட்டவீரர்களை நிச்சயமாக உருவாக்க முடியும்.

ஆசிய கண்டத்தில் கால்பந்து விளையாட்டை மேம்படுத்த நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். இந்தியா, சீனா உட்பட 08 நாடுகளைக் கால்பந்தில் முன்னணி அணிகளாக மாற்ற ஆசிய கால்பந்து கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது. உலக மக்களால் அதிகம் விரும்பப்படும் 200இற்கும் அதிகமான நாடுகளில் விளையாடப்படும் கால்பந்துப் போட்டியில் இந்தியாவின் நிலைமை பரிதாபமாக இருக்கின்றது. உலகக்கிண்ண தகுதிச் சுற்றுக்காவது அவர்கள் முன்னேற வேண்டும் எனத் தெரிவித்திருக்கின்றது.

# பயிற்சியாளராக ரீட் சிபார்சு

இந்திய அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக அவுஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான புரூஸ் ரீட்டை நியமிக்குமாறு இந்திய அணி நிர்வாகம் கிரிக்கெட் சபையைக் கேட்டுள்ளது.

84 நாட்கள் பயணமாக அவுஸ்திரேலியா சென்றிருக்கும் இந்திய கிரிக்கெட் அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக முதல் டெஸ்ட் ஆரம்பமாகும் முன்பே நியமிக்க வேண்டும் என அவுஸ்திரேலியாவில் இருக்கும் இந்திய அணி நிர்வாகம் கிரிக்கெட் சபையைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த வேண்டுகோளை ஏற்றுள்ள கிரிக்கெட் சபை விரைவில் பந்து வீச்சு பயிற்சியாளரை நியமிக்க உறுதியளித்துள்ளது.



# மாகாண சபைகளின் அபிவிருத்தியில் மத்திய அரசு தலையிடக்கூடாது

## மாகாண முதலமைச்சர் கூட்டத்தில் தீர்மானம்

மாகாண சபையின் அபிவிருத்தியில் மத்திய அரசு தலையீடு செய்யக் கூடாது என மாகாண முதலமைச்சர்களின் மாநாட்டில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாண முதலமைச்சர்களின் மாநாடு பொலநறுவை சுதுஅரலிய விருந்தகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது 2ஆம் நிகழ்வை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய வடபிராந்திய மாகாண முதலமைச்சர் பேர்ட்டிபிரேம்லால் திஸாநாயக்க ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், அதிகாரத்தை பரவலாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது எனினும் அது மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள காணிப்பகிர்வு, நீதித்துறை உள்ளிட்ட அதிகாரங்களைத் தம்வசப்படுத்த முயற்சிப்பது சட்டவிரோதச் செயலாகும் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை இவற்றைத் தடுக்கும் முகமாக மாகாண முதல்வர்களின் கூட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தவும் நேற்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக பேர்ட்டி பிரேம்லால் திஸாநாயக்க தெரிவித்தார். (32)

# க.பொ.த.(சா/த) பரீட்சை முதலாம் திகதி ஆரம்பம்

(மன்னார்)

கல்விப்பொது தராதர சாதாரணதரப் பரீட்சை டிசம்பர் முதலாம் திகதி தொடக்கம் 12ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 2695 பரீட்சார்த்திகள் இப் பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

இலங்கை முழுவதும் பாடசாலை மூலம் 382,798 பரீட்சார்த்திகளும், வெளிப் பரீட்சார்த்திகள் 122,560 பேரும் 3846 பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

இதில் மன்னார் கல்வி வலயத்தைச் சேர்ந்த 1343 பாடசாலை பரீட்சார்த்திகளும் 493 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

மடுக்கல்வி வலயத்தில் 295 பாடசாலை பரீட்சார்த்திகளும் 67 தனிப்பட்ட பரீட்சாார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

அத்துடன் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை 7ஆம் திகதி நடைபெறவுள்ளது. இப்பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 1461 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.(மி)

## -வடமராட்சி வல்லிபுரம் கோவில் பகுதியில்-

# முயல்வேட்டைக்குச் சென்ற மக்கள் மீது சிறில.படையினர் துப்பாக்கிச் சூடு

வடமராட்சி, வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தை அண்டிய பகுதியில் பொதுமக்கள் மீது படையினர் நேற்று கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அப்பகுதிக்குச் சென்றிருந்த மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட இராணுவத்தினர் பின்னர் சுற்றிவளைத்து எழுவரைக் கைது செய்து விடுவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மீது படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இருவர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை படையினரின் தாக்குதலிற்குள்ளாகி காயமடைந்தவர்களைச் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் செல்லக்கூடாதெனவும் அவர்களது வீடு தேடிச்சென்ற படையினர் அறிவுறுத்தியுமுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் துன்னாலை, குடவத்தைப் பகுதியைச் சேர்ந்தவர்களெனத் தெரிய வரும் சுமார் 20 பேர் கொண்ட குழுவொன்று முயல்வேட்டைக்காகக் குறித்த வல்லிபுரம் பகுதிக்கு நேற்றுப் பிற்பகல் சென்றுள்ளனர்.

குறித்த பகுதியில் முகாம் அமைத்து நிலைகொண்டுள்ள படையினர் காரணம் ஏதும் தெரிவிக்காது இவர்களைத் தாக்கமுற்பட்டுள்ளனர். இதையடுத்து பயத்தினால் அங்கிருந்து தப்பியோட முற்பட்டவர்களை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்த படையினர் அவர்களில் எழுவரைப் பிடித்துள்ளனர்.

பிடிக்கப்பட்டவர்களில் படையினரின் மோசமான தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தர்களான மகேந்திரம் மன்மதராஜன் (வயது- 24)(துன்னாலைதெற்கு, குடவத்தை) மற்றும் அதே இடத்தைச் சேர்ந்த இராமசாமி சத்தியகுமார் (வயது23) ஆகிய இருவரும் நேற்று மாலை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சிறுகாயங்களுக்குள்ளான சிறுவர்களான துரைசிங்கம் ரஜிகாந்தன் (வயது15) தேவராஜ் ராஜ் (வயது 15) மற்றும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள மன்மதராஜனின் சகோதரரான மகேந்திரம் மதீஸ்வரன் (வயது 14) ஆகிய மூவரும தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களுடன் வல்லி தேவராஜா (வயது 37) மற்றும் சதாசிவம் ரமேஸ்வரன் (வயது22) ஆகியோரும் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று மாலை குறித்த பொதுமக்களது வீடுகளுக்கு வாகனங்களில் நேரில் சென்ற படையினர் தாக்கப்பட்டவர்களைச் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் செல்லக் கூடாதென அச்சுறுத்தியுள்ளதுடன் சம்பவம் தொடர்பாக எவரிடமும் புகார் செய்யக்கூடாதெனவும் அச்சுறுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகளின் அரசியல் துறைக்கு பாதிக்கப்பட்டவர்கள் புகார் செய்துள்ளனர். (27)

# மருத்துவ பரிசோதனைக்கு சமுகம்தரக் கோரிக்கை

கிளி.மாவட்ட வைத்திய சாலையில் மருத்துவ பரிசோதனைக்கு தோற்றி மார்புப் பரிசோதனைக்கு தோற்றாத சகல அரசாங்க அலுவலர்களும் மேற்படி பரிசோதனைக்காக 2003.12.03 புதன்கிழமை காலை 8.00 மணிக்கு கிளி. மாவட்ட வைத்தியசாலைக்கு வருகைதருமாறு கிளிமாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ச.விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார்.

# கிருஷாந்தி கொலை மேன்முறையீடு தீர்ப்புத் திகதி அறிவிக்காது ஒத்திவைப்பு

(கொழும்பு)

கிருஷாந்தி குமாரசுவாமியின் கொலை வழக்கில் மரண தண்டனை பெற்றோரின் மேன்முறையீட்டுக்கான தீர்ப்புத் திகதி அறிவிக்காமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று இந்த மனுதொடர்பான விசாரணைகள் அனைத்தும் முடிவடைந்தன. இந்த நிலையில் எதிர்வரும் 19ஆம் திகதி மனுதாரர் தரப்பும் பிரதிவாதி தரப்பும் தமது எழுத்துமூலத் தொகுப்புக்களை மன்றில் சமர்ப்பிக்குமாறு நீதியரசர் உத்தரவிட்டுள்ளார்.

1995ஆம் ஆண்டு மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இதனையடுத்து அவரது தாயார் சகோதரர் மற்றும் அயலவர் ஆகிய மூவர் கொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்புடைய ஐந்து இராணுவத்தினருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து குறிப்பிட்ட ஐவரும் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இதில் தீர்ப்பு ரத்துச் செய்யப்பட்டு தம்மை விடுதலை செய்யவேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர். (32)

# தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் ஆட்சி புரிவதற்கு அவர்களுக்கு உரிமையுள்ளது

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை அவர்கள் ஆட்சி செய்வதில் சிங்கள மக்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் ஏற்படப்போவதில்லை. எனவே அவ்வாறான நிலைப்பாட்டுக்கு சிங்கள மக்கள் உதவவேண்டும் என சனநாயக இடதுசாரி முன்னணியின் அமைப்பாளர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சனநாயக இடதுசாரி முன்னணியின் வருடாந்தக் கூட்டம் நேற்று கொழும்பு பொது நூலகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய வாசுதேவ நாணயக்கார, தமிழ் மக்கள் அவர்களின் பாரம்பரியப் பிரதேசத்தில் ஆட்சியை மேற்கொள்வதற்கு உரிமை இருக்கிறது. அதில் எவரும் தலையிட முடியாது. போரை எதிர்க்கும் சிங்கள மக்கள் இதனை ஏற்றுக்கொள் வார்கள் எனவும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தற்போதைய சூழ்நிலையில் தேசிய அரசாங்கம் உருவாக்கப்படுவதால் தென்னிலங்கை மற்றும் வடபகுதியின் சனநாயக செயற்பாடுகளுக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்படும் அதே வேளை மக்கள் விடுதலை முன்னணிக்கும் எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனக் கூறினார்.

எனவே இன்றைய சூழ்நிலையில் இடதுசாரிகள் ஒன்றிணைவது அவசியம் என அவர் வலியுறுத்தினார். (32)

### திருமலையில்..

சத்துக்கு ராணுவ பாதுகாப்புடன் உணவுகள் எடுத்துச் செல்லப்பட்ட போதும் அதற்குப் பின்னர் எந்தவொரு உலர் உணவு விநியோகமும் நடைபெறவில்லை.

இதே வேளை நேற்று உலர் உணவு பிரதான வீதியினூடாக வெளியில் செல்ல முடியாத நிலை தொண்டர்கள் சேகரித்த பெருமளவிலான பொருட்கள் செஞ்சிலுவை சங்கத்தின் உதவியுடன் கடல் வழியாக ஈச்சந்தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.(32).

### கிண்ணியா...

முன்னர் திருமலை மாவட்டத்தில் இரண்டு முஸ்லிமகள் கொல்லப்பட்ட நிலையில் மேலும் மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளமை அப்பகுதி தமிழ் மக்கள் மத்தியில் பதற்ற நிலை அதிகரித்துள்ளது. (25)

### இலங்கை...

நாடாளுமன்ற உறுப்பினர் ரிசத் பதியூதின் அடங்குகிறார். இந்தக் குழுவின் தமிழக முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதியை சந்தித்துள்ளனர். தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவையும் அவர்கள் சந்தித்தனர்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் ரவூப்ஹக்கீம் மாத்திரம் எதிர்வரும் 6ஆம் திகதி வரை இந்தியாவில் தங்கியிருந்து பிரச்சினைகள் தொடர்பில் இந்திய அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார். (32)

### பதில்..

கிழக்கிலே ஏற்கனவே சுகாதார ஊழியர்களுக்கான கடும் பற்றாக்குறை இருப்பதை நன்கு அறிந்தும், பொருத்தமான பதில் ஆட்கள் நியமிக்கப்படாது சுகாதாரத் திணைக்களம் இடமாற்ற உத்தரவுகளை அனுப்பியிருப்பது புரியாத ஒன்றாக இருக்கின்றது. (லோ)

### சிறிலங்கா...

அங்கு இருக்கவில்லை. அவர் எங்கு உள்ளார் என்ற விபரமும் தெரியவில்லையென பொலிசார் கூறினர். சுமதி பாலவிற்கும் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்ட பாதாள உலகக் கோஷ்டி தலைவருக்குமிடையே தொடர்பு உண்டென விளக்கமறியலில் இருக்கும் இன்னொரு பாதாள உலகக் குழுத் தலைவர் கூறியுள்ளார். பெத்தேகன சஞ்சீவ கொலை, சண்டே லீடர் பதிப்பாசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் வீடு தாக்கப்பட்டமை என்பவற்றிக்கும் சுமதிபாலவிற்குமிடையே தொடர்பு உண்டெனவும் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

### வவுனியா...

உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நாள் ஒன்றுக்கு வெளிநோயாளர் பிரிவில் 700 இற்கு மேற்பட்டோர் சிகிச்சை பெறுவதுடன், 90 நோயாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அத்துடன் நாள் ஒன்றுக்கு 7 குழந்தைகள் பிறப்பதாகவும், வைத்திய அத்தியட்சகர் கே.செந்தில்நாந்தன் மேலும் தெரிவிக்கின்றார். (21)

### தென்பகுதி..

சிக்கல் நிலையை ஏற்படுத்தும் என அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.ஐக்கிய தேசியக் கட்சி சமாதானத்தை முன்கொணரும் வகையில் செயற்பட்டு வருகிறது. இதற்கு எதிராக தேசிய அரசு செயற்பாடுகள் அமையுமாயின் தமது கட்சி எந்தவொரு தருணத்திலும் பொதுத் தேர்தல் ஒன்றினை சந்திக்கத் தயார் என அவர் தெரிவித்துள்ளார்.(32)

### சர்வதேச...

நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையிலேயே நாம் இருந்து வருகிறோம். வளர்ச்சியடைந்த நாடுகளில் வலுவிழந்த மக்களுக்கென தனியான சட்டதிட்டங்களும் வாழ்க்கை முறைகளும் வரையறுக்கப்பட்டு அந்த வரையறையின் பிரகாரம் வளம் மிக்கதான ஒரு எதிர்காலத்தினை அவர்கள் அடையக்கூடிய வாய்ப்புக்களை உருவாக்கியிருக்கின்றனர். இந்த நிலையை நாம் எய்துவதற்கு நீண்டகாலம் எடுக்குமென்றாலும் ஒருசில அவசரத் தீர்வுகளையாவது நாம் அமுல்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம் என்பதை மறுக்கமுடியாது.

இவ்வாறான நோக்கிலேயே வெண்புறா நிறுவனமானது ஆண்டுதோறும் இந்த வலுவிழந்தோர் தினத்தினை அனுஷ்டிப்பதுடன் அவர்களுக்குத் தேவையான செயற்கை உறுப்புக்களை வழங்கியும் வருமான அதிகரிப்புத் திட்டம், கல்வி வளர்ச்சி, தொழில்சார் பயிற்சிகள் முதலிய ஜீவனோபாய வசதிகளை அமுல்படுத்தி வருகின்றது. இவ்வாண்டு வலுவிழந்தோர் தின நிகழ்வுகளை பன்முகப்படுத்தும் வகையில் வன்னிப் பெருநிலப்பரப்பில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு, நெடுங்கேணி, கனகராயன்குளம், மாங்குளம், பனங்காமம், ஆண்டாங்குளம், பூநகரி, பளை, தாளையடி ஆகிய தொடர்பகங்கள் மூலமாகவும் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய கிளை நிறுவனங்கள் மூலமாகவும் உகந்த முறையில் அனுஷ்டிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் முக்கிய அம்சமாக அமெரிக்க நாட்டுத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் இருந்து அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற 100 வலுவிழந்த குடும்பங்களுக்குரிய வீட்டுப்பாவனைப் பொருட்கள், 100 வலுவிழந்த மாணவர்களுக்குரிய கல்வி உபகரணங்கள் முதலியன தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன. அத்துடன் முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், ஊன்று கோல்கள் என்பனவும் அவரவர் தேவைக்கேற்றவாறு விநியோகிக்கப்படவுள்ளன.

எனவே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரைப் போன்று ஏனைய நிறுவனங்களும், அமைப்புக்களும் இந்த நிகழ்வினை சிறந்த முறையில் நடாத்தி முடிப்பதற்குத் தங்கள் பூரண ஒத்துழைப்பினை நல்குமாறு வெண்புறா நிறுவனம் அன்புடன் வேண்டிக்கொளகின்றது என அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.